உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

பன்னிரண்டாந் திருமுறை

# விநாயகர்

## திருப்புகழ்போற்றிக்கலிவெண்பா

விநாயகர்துதி,

விநாயகரலங்காரம்,

சிவானந்தலகரி,

தேவிமானதபூஜை, சிற்சத்தியஷ்டகம்,

முருகர் மும்மணிக்கோவை,

முருகேசர்பதிகங்கள்,

சடையீசர்தேவாரப்பதிகம்,

குருஸ்தோத்திரபஞ்சகம் இவைமுதலியன

திருவருட்பிரசாதத்தால்

## சிவானந்தமூர்த்தி

அன்புகூர்ந்துபாடிய

## தோத்திரப்பிரபந்தங்கள்.

சென்னை வண்ணாரப்பேட்டை

பு. க. கிருஷ்ணசுவாமிபிள்ளையவர்கள்

இலக்ஷுமிவிலாஸஅச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

கலியுகாதி-ருகளஎ—புவ ஞு வைகாசிமீ

(Registered Copy Right.)

சிவமயம்.

—*—

# விநாயகர்

# திருப்புகழ்போற்றிக்கலிவெண்பா.

## உபாசன காண்டம்.

பூமேவு நான்முகனும் புண்டரிகக் கண்ணனென்னல்
தாமேவு முத்தொழிலுஞ் சாதிக்க—மாமேவும் ௧

ஆதிவி நாயகனை யர்ச்சித்துப் போற்றிசெய்த்
தீதில்வரந் தந்த திறம்போற்றி—பூதலத்தை ௨

ஆக்க வளித்து லகற்றலெனு முத்தொழிலும்
ஊக்கநெறி தேரு தயங்குங்கால்—மாக்கருணை ௩

விஸ்வரூ பங்காட்டி மேவுவித்துத் தன்னுள்ளே
விஸ்வசிர்ட்டி தேற்றும் விறல்போற்றி—விஸ்வத்தை ௪

விக்ன கணேசனருள் வேண்டாது தாந்தொடங்கப்
புக்கவினை கோடியதாய்ப் புன்கணுறீஇ—அக்கடவுள் ௫

தாளிணையைப் போற்றவந்து தன்கிரியா ஞானசத்தி
நீளருளா லாற்றுகென்ற நேர்போற்றி—மீளவவர் ௬

தன்மகளாய்த் தோன்றத் தவஞ்செய் தவாருளால்
மன்னுசித்தி புத்தியெனு மாநாமந்—துன்னிவா ௭

ஆண்டகண நாதற் கருமணஞ்செய் வித்துவந்து
மீண்டொழில் பெற்ற நிலைபோற்றி—நீண்மால் ௮

மதனைகை யிடவொரு மாவசுரர் தம்மால்
சதுரிழந்தய் யீசனடி சார்ந்து—துதிசெயவும், ௯

# சிவானந்தமூர்த்தி

பாடியருளிய

# சாத்திரப்பிரபந்தங்கள்

---

ஸ்ரீராமமூர்த்தி சீவன்முத்தியடைந்த
ஞானவாசிட்டசருக்கமிரண்டு

ஆத்மபோதம்

திர்க்திரிசியவிவேகம்

தக்ஷிணாமூர்த்தியஷ்டகம்

சுகாஷ்டகம்

சிவோகபஞ்சகம்

மநீஷாபஞ்சகம்

மோக்ஷசாதனபஞ்சகம்

இவைமுதலியன.

சமஸ்கிர்தமொழியிற் பண்டிதரான மகானுபாவர்களால் கூறப்பட்ட இவ்வருமையான பிரபந்தங்களை மொழிபெயர்த்துத் தமிழ்க்கவிதையாகப்பாடி சுவானுபவம்பெற்று உலோகோபகாரமாக அச்சிற்பதிப்பித்து பிரசாரஞ்செய்து கிர்தகிர்த்தியராய் பரமபுருஷார்த்தமடைந்தனர்.

உ

சிவமயம்.

—*—

# விநாயகர்

## திருப்புகழ்போற்றிக்கலிவெண்பா.

### உபாசனா காண்டம்.

பூமேவு நான்முகனும் புண்டரிகக் கண்ணனன்னல்
தாமேவு முத்தொழிலுஞ் சாதிக்க—மாமேவும் ௧

ஆதிவி நாயகனை யர்ச்சித்துப் போற்றிசெய்த்
தீதில்வரந் தந்த திறம்போற்றி—பூதலத்தை ௨

ஆக்க லளித்த லகற்றலெனு முத்தொழிலும்
ஊக்கநெறி தேரு தயங்குங்கால்—மாக்கருணை ௩

விஸ்வரூ பங்காட்டி மேவுவித்துத் தன்னுள்ளே
விஸ்வசிர்ட்டி தேற்றும் திறல்போற்றி—விஸ்வத்தை ௪

விக்ன கணேசனருள் வேண்டாது தாந்தொடங்கப்
புக்கவினை கோடியதாய்ப் புன்கணுறீஇ—அக்கடவுள் ௫

தாளிணையைப் போற்றுவந்து தன்கிரியா ஞானசத்தி
நீளருளா லாற்றுகென்ற நேர்போற்றி—மீளவவர் ௬

தன்மகளாய்த் தோன்றத் தவஞ்செய் தவருளால்
மன்னுசித்தி புத்தியெனு மாநாமம்—துன்னிவா ௭

ஆண்டகனை நாதற் கருமணஞ்செய் வித்துவந்து
நீண்டதொழில் பெற்ற நிலைபோற்றி—நீண்மால் ௮

மதுகைக யிடவரெனு மாவசுரர் தம்மால்
சதுரிழந்தங் கீசனடி சார்ந்து—துதிசெயவும். ௯

தேற்றிக் கணேசன் றிருவருளால் வெல்கவெனப்
போற்றிவலி பெற்ற புகழ்போற்றி—ஆற்றலுள ௪௰

வீமரா ஜன்வனத்தை மேவிவிஸ்வா மித்திரனை
ஆவன்மகப் பேறதனை யாசிக்க—தாவுமுன்முன் ௪௧

வல்லாள மாராஜன் வாய்த்தமகன் றக்கனெனும்
நல்லான்றா யோடுபிற நாட்டணைந்து—பொல்லாநோய் ௪௨

தீர விநாயகனைச் சிந்தித்து முக்கலறல்
சீர்பலவும் பெற்றதுவா சீர்போற்றி—நேர்வல்லான் ௪௩

முக்கட் கணேச முதல்வனடி சிந்தித்து
நக்கமுத்தி பெற்ற சதுர்போற்றி—மிக்கவன் ௪௪

சந்ததியிற் றோன்றச் சதுர்வீமன் கௌசிகனால்
முந்தருனைப் போற்றநெடு மொய்ம்புடைய—மைந்தன்றனுக்கு ௪௫

மாங்கதனைப் பெற்று வளர்சார்வ பௌமனென
ஆங்குமுடி சூட்டு மருள்போற்றி—இங்குசெயும் ௪௬

இந்திரற்குக் கோதமனு விட்டபெருஞ் சாபமறச்
சிந்தித்துச் சிந்தா மணியருளால்—முந்துருதி ௪௭

ஆயிரங்கண் ணாக வமரர்க்குத் தோன்றவைத்த
நேயவினை யில்லா நெறிபோற்றி—வாய்ந்தருக்கு ௪௮

மாங்கதமா ராஜன் வலியப் புணர்வந்த
தேங்குகவி மாமுனிவன் றேவியெனும்—ஈங்கார் ௪௯

முகுந்தையிடு சாபத்தால் மூண்டதொரு கோலைத்
தகைந்தான் கணேசனருள் போற்றி—முகுந்தையுறும் ௫௰

இந்திரனைக் கூடி யெழிலார் கிரிச்சமத
மைந்தனைத்தந் தாங்கவனு மாமுனியாய்—முந்தருளின் ௫௧

கூட்டத்தில் வாதாடிக் கூறுமிழி வோர்ந்துபிதா
வாட்டமற வோதா மனுவுணர்ந்து—சேட்டமுறச் ௨௨

சிந்தித்து நீடிருந்த தியானத்திற் றோன்றுபலி
மைந்தன்க ளுணர்ந்துவா மந்திரத்தை—வந்தித்து ௨௩

மூவுலகுந் தாள்பணிய முப்புரமும் பெற்றரசு
மேவுந்தந் தாண்ட விறல்போற்றி—தேவரெலாம் ௨௪

நாரதனைக் கண்டு நவின்றருளே காட்சரத்தை
ஆர்வமொடு தாஞ்செபிக்க வைங்கரனுர்—நேராக ௨௫

வந்து குறைதீரும் வகையருள்வோம் நீர்சிவன்பால்
முந்தடைமி னென்ற முறைபோற்றி—நந்துபலி ௨௬

வாழ்புரத்திற் சென்று மறையோன் வடிவாகத்
தாழ்வில்கை லாயச்சிந் தாமணியை—வாழவருள் ௨௭

என்றலுமே நந்தேனென் றீசனெறும் போர்தொடங்க
நின்றவிம லற்கருளு நேர்போற்றி—வென்றிபலி ௨௮

முப்புரத்தோ டுஞ்சென்று மூண்டபோ ரிற்படைகள்
குப்புறவீழ்ந் தோடக் குலைகுலைந்து—செப்பரிய ௨௯

ஆற்றலுடை முப்புரமு மாங்கவனு நீறுபடச்
சீற்றநகை செய்த திறம்போற்றி—போற்றிமவான் ௩௰

மாமகளாய்த் தோன்றி மதியா வணிசதுர்த்தி
காமருநாள் மாவிரதங் கண்டவுமை—தாமகிழும் ௩௧

அத்தனருள் பெற்றுமனை மாங்கடையப் பேறளிக்குஞ்
சித்தியனை சன்மகிமைச் சீர்போற்றி—உத்தமனாங் ௩௨

கர்த்தமமா ராஜனிந்தக் காசினிமுற் றாளுங்கால்
அர்த்தமுணர் பிருகு வாங்கடையப்—பத்திசெயு ௩௩

தாமரசு பெற்ற தவஞ்சதுர்த்தி மாவிரதம்
ஆமெனக்கேட் டாற்று மருள்போற்றி—பூவுலகை ௧௪

ஆண்டநள மாராஜ னுங்கடைந்த கோதமனால்
மாண்டஜென்மங் கௌசிகன்சொல் மாவிரதம்—பூண்டிருஞல்

இவ்வரசு பெற்ற தினிப்பகைநீ ரச்சதுர்த்தி
அவ்விரதஞ் செய்வித் தருள்போற்றி—செவ்வியகோற் ௧௬

சந்திராங்க தன்போரிற் சாய்ந்தடைந்த பாதலத்தில்
விந்தைமங்கை மார்தழுவ வேண்டவெறுத்—திந்துமதி ௧௭

நாரதன்கூ றுஞ்சதுர்த்தி நல்விரதம் பூண்டியற்ற
ஊர்பரிமேற் றந்த வரம்போற்றி—பேர்பெரிய ௧௮

தாருகனாற் றேவர் தளர்ந்தரன்பாற் சென்றுரைக்க
வீரமொப்பில் சண்முகனே வந்தாலும்—சீர்முருகர் ௧௯

அண்ணு வெனக்கிருஷ்ணை யாற்றருளிற் சிந்திக்க
வண்ணமயி லீந்த வளம்போற்றி—கண்ணிரதி ௨௦

ஈசனைத்தாழ்ந் தேற்ப விவட்குருவாய்த் தந்தமதன்
ஆசில்சிவ னேறியவே காக்ஷரத்தால்—மாசில்கனை ௨௧

நாதனருள் பெற்று நவையகன்று கண்ணன்பால்
ஓதின்மக னான திறம்போற்றி—போதமிகும் ௨௨

ஆதிசே டன்செருக்கா லாயிரஞ்சுக் காய்ச்சிரசு
நீதிகனே சன்மனுவை நீள்சதுர்த்தி—மாதினத்தில் ௨௩

அன்பால் விரத மனுஷ்டித் தவன்செபிக்க
மன்னுதா பந்தமா மன்போற்றி—முன்மகவான் ௨௪

தேவவிமா னம்புவிமேற் சோர்ந்து சோசனெனும்
மாவரசன் கண்டுதொழ மாதவத்தால்—தேவர்தொழும் ௨௫

பூர்சுண்டி யைங்கரனைப் போற்றியடைட் நாற்றுதவிச்
சீர்காண வந்ததென்ற சீர்போற்றி—பேர்கிருத ௪௬

வீரியமா ராஜன் விழைமகப்பே றுங்குதவச்
சேர்பிதுர்க்கள் வேதாவைத் தேருங்கால்—பூருவத்தில் ௪௭

நம்மகன்செய் பிரம்மஹத்தி நூற்சங் கடசதுர்த்தி
அம்மனுவாற் செய்கென் றருள்போற்றி—செம்மைப் ௪௮

பாரத்துவாஜன் வீரியத்தாற் பாரளித்த செவ்வாய்
வரச்சதுர்த்தி நாளிலே வாய்ந்த—கிரத்திறைல் ௪௯

யார்க்குந்தாம் வேண்டியபே றைங்கரனார் நின்றளிக்க
மாகக்கோ ளான வரம்போற்றி—சோகமறும் ௫௰

காரதனார் கொண்டுதவு நற்கனியீ சன்முருகற்
காதரவாய்த் தந்த தறிந்தசசி—சீரில்நகைப் ௫௧

பாற்சாபம் பெற்றழுங்கிப் பண்பிற் றவம்புரிய
மேற்பரிசு தந்த விறல்போற்றி—கீர்த்தி ௫௨

பெருஞ்சுலப மாராஜன் பீடில்மது சூதன்
பெருமைகண்டு தீரனைக்க வட்கி—மறுகியிடு ௫௩

சாபத்தை யோர்சுபதை தான்மறுசா பங்கொடுக்க
கோபத் தவன்சபித்த கொள்கையினல்—தாபத் ௫௪

தெருநாய்க் கழுதையா யீனப் புலையாய்
வருதுயரி லங்கரனார் வாழும்—ஒருகோயில் ௫௫

உட்புகுந்தொன் றோடொன் றுடன்றுசுற்ற மூன்றுமுரு
இட்டதிரு மேனியிலே யென்றதனல்—பட்ட ௫௬

அவையபுத்தி பூருவமா யர்ச்சித்த தாகத்
தவர்பூசைக் கொப்பாய்ச் சமைந்தே—இவர்மேலத் ௫௭

## விநாயகர் திருப்புகழ்போற்றிக்கலிவெண்பா.

நந்துகண நாதரிவர் நம்மைவிம்மா னத்தேற்றி
முந்துவரச் செய்த முறைபோற்றி—வந்தகண ௫௮

நாதர்மே லேரீர்வினவ நன்றறுகின் மான்மியத்தை
ஓதுவர்முன் றெளியம னூற்றளித்த—தீதனலன் ௫௯

தன்னைக் கணேசன் றணிந்து விழுங்குவெப்பம்
முன்னீக் கியதென் முறைபோற்றி—அன்னதனைக் ௬௰

கண்டகவுண் டின்யர்முதற் கற்றுணர்ந்த மாமுனிவர்
மண்டலத்தி லுள்ளபல மாதவரும்—கொண்டரிய ௬௧

மாமலரின் மேலாய் மகிழ்ந்தர்ச் சனைபுரியக்
காமருபே றீந்தகடைக் கண்போற்றி—மாமிதிலை ௬௨

ஆள்சனக மாராஜ னன்னையிலே தாண்டரமென்
தேளிதமாய்க் கொண்ட விறுமாப்பு—மாள ௬௩

அருள்சேர் விநாயகரோ ரந்தணனாய்ச் சென்று
பொருள்விளங்கத் தேற்றுபுகழ் போற்றி—மருடீர்ந்த ௬௪

அன்பாற் றனைப்போற் றரியதிரி சிரன்பால்
முன்போ யறுவிரந்து மூள்பசியை—இன்பாக ௬௫

மாற்றி யவன்குடிலை மாளிகையாச் செல்வமுறத்
தேற்றிமுத்தி தந்த திறம்போற்றி—சீர்த்திக் ௬௬

கவுண்டின்ய மாமுனிவன் காதலியாள் கேட்பத்
தவத்தூர்வை மான்மியத்தைச் சாற்ற—அவளரிய ௬௭

ஓரறுகைத் தந்நிறை யும்பர்கோன்பாற் பொன்கேள்
சீர்பெறநா மென்னத்தான் சென்றளிக்கத்—தேர்மகவான் ௬௮

நற்குபே ரற்குணர்ந்த நாடியவன் றட்டினிடை
பொற்குவையோ டாங்கவறும் புங்கவரும்—உற்றும் ௬௯

அறுசுவைத்த தட்டங் கசையா தமையால்
மறுவின்முனி யன்பு மதித்து—வருமமரர் ௭௦

மூவரொடு முன்வந்து முத்தனுக்குக் காட்சிதந்து
மேவவர மென்மேனும் வேண்டியவா—நீவதனால் ௭௧

முருந்தோடு மூவிதழாய் மூவேழர்ச் சிப்போர்
மருந்தான வாரிதியே போற்றி—பெரும்பாவி ௭௨

சாம்பனெனு மன்னவன்றன் றீயொழுக்கத் தாற்குடிகள்
சாம்பப்பல் தீவினைக டாஞ்செய்து—தேம்பி ௭௩

இட்டநரகிற் சார்ந்தங் கிருந்துநெடுங் காலம்
புடவியினில் வேடனெனப் போந்தே—அடவியினில் ௭௪

பற்பலரைக் கொன்ற பழியோ ரரக்கனெனத்
தற்றொடர வோடிவன்னித் தாருவின்மேல்—உற்றிட்டும் ௭௫

அப்பத் திரங்க ளதிர்ந்ததன்கீ ழைங்கரன்மேல்
தப்பிவிழ முத்தியரு ளாள்போற்றி—செப்பரிய ௭௬

நீள்வரங்கள் பெற்று நெடுங்கா லுலகமெலாம்
ஆளு மிரண்யகசி பன்றன்னை—நீளரியாய் ௭௭

வன்னி விநாயகனை வந்தித்து மாதவனார்
தன்னுயிராற் கொன்ற தகைபோற்றி—பின்னர் ௭௮

வருமிரணி யாக்கதனை வன்கேழ லாய்க்கொன்
றரிய விரோசனன்பா லுற்றுத்—திருவார்ந்த ௭௯

மோகினியாய்த் தோன்றி முகிர்சிரத்தைக் கொட்டழித்த
வாகைவிக்கினேச் சுவரம்போற்றி—ஈகையுள ௮௦

மாவலிபாற் சென்றவனை மண்ணுமூ வடியிரந்து
பூவுலக முற்றுமிரு பொன்னடியாய்—மேவவொரு ௮௧

 விநாயகர் திருப்புகழ்போற்றிக்கலிவெண்பா.

தாளவன்றன் பூமுடிமேற் றங்கவைத்துப் பாதலத்தை
ஆளவைத்த வாம னருள்போற்றி—நீள்புவியாள் ௮௨

பேர்பிரிய மன்விரதன் பெற்றகீர்த் திப்பிரபை
பாரியராய்க் கொண்டிளையாள் பாலன்பு—சேர்தலினால் ௮௩

வஞ்சிக்கப் பட்டயிலா மாய்க்கிளை மூந்தானன்
நெஞ்சமறை யோனுரைத்த நீள்விரதந்—நஞ்சமெனக் ௮௪

கண்டாரு வன்னி கணேசன்று ளர்ச்சிக்கக்
கொண்டவரு ளாலளித்த கோமகனை—மண்டுவிடம் ௮௫

கேள்கிரிச்ச மாமுனியாற் கேதமற மாற்றியே
ஆளருண்மா தங்க னடிபோற்றி—நீள்சீர் ௮௬

அவுரவ மாமுனிக்கு மன்னைசுமே தைக்கும்
தவவலியாற் றோன்றுஞ் சமிக்கு—நவமாந் ௮௭

தவும்ய முனிமைந்தன் சவுனகர்தஞ் சீடன்
உவமையில்மந் தாரனுக்கு மொத்து—தவனீனஞ்செய் ௮௮

தங்கவர்கள் காண்முற வன்பர்புரு சுண்டிமுனி
தொய்குமுகந் தொந்தியையுஞ் சூழ்ந்திவர்கள்—நய்குசெயய் ௮௯

கண்டிருத்து நீர்தருவாய்க் கானகத்தில் வாழ்கிரொண
விண்டசா பந்திர்க்க வேண்டியே—தொண்டாகு ௯௦

சவுனகர்தாம் போற்றுந் தலைகூர் கணேசர்
உவர்தருவாய் நின்றவிடத் துற்றுப்—பவமகல ௯௧

மந்தாரை வன்னி மலர்தளிராற் பூஜைசெய
நந்தா வரமளித்து நன்மைதர—முந்துமனை ௯௨

தன்னுலகஞ் சேரத் தவத்தந்தை யோகத்தால்
அன்னதருக் குள்ளால மாகியே—மன்னுமகத் ௯௩

இந்திரனை யாதியர்க்கு மீவரவிற் பாகமதால்
நந்துசமி யென்ற நலம்போற்றி—கந்தமலர்ச் ௯௪

சாவித் திரியைவிட்டுச் சாருங்கா யத்திரியை
மேவுமயன் யாகம் விளக்குங்கால்—போதாத ௯௫

சாவித் திரிவெகுண்டு சாபித்த தேவரெலாம்
பாவிப் புனலாய்ப் பரந்தோடத்—தேவியர்கள் ௯௬

வேதாவைக் கண்டு வினவ விநாயகரோ
தாதாவென் றேத்துகெனத் தாமடைந்து—மேதகைய ௯௭

வன்னிமலர் மந்தாரை மாநிழலி லைங்கரர்சீர்
பன்னவவர்க் கீந்த பதம்போற்றி—தன்னருள்சேர் ௯௮

கீர்த்தியொடு சேய்கிப் பிரசாதன் காசியெய்திச்
சீர்த்திமணி கர்ணிகையாந் தீர்த்தத்தைப்—போற்றியதில் ௯௯

ஆடிவிஸ்வ நாத ரடியிணைகள் சேவித்து
நாடியருள் டுண்டி விநாயகனைப்—பாடி ௧௦௦

ஆசிரிய ரோதுமனு வைங்கார்நா லக்ஷரத்தை
வாசியொடு முச்சரித்து வந்திக்கத்—தேசார் ௧௦௧

கணேசர் திருக் காட்சிபெறக் காத்திருந்தார் மீறுள்
பணுமுடியைந் தோய்ந்து பன்னுங்—குணுளோர்களோ ௧௦௨

இம்மகனே ராயிரமாண் டிவ்வுலகை யாண்டற்றில்
நம்முலகைச் சார்கவென நற்பாசம்—அம்மகன்கைத் ௧௦௩

தந்தருளப் பெற்றவர்கள் தந்தையுடன் சேர்ந்தவரால்
முந்தாசு பெற்ற முறைபோற்றி—இந்தவுலக ௧௦௪

முந்துபிர மன்கூற முற்றும் பிதுர்தேவன்
நந்துமக னுற்ற நனிவளர்ந்து—வந்தவன்பால் ௧௦௫

அப்புத் தகமளித்தே யன்பாற் சதுர்த்தியினில்
முப்புவிபோற் றும்விரத முற்றுகெனச்—செப்பத் ௧௦௬

தலைமேற்கொண் டன்பாகச் சாதித்துப் பெற்ற
குலமகன்கை காலில் குறையால்—புலமுனிவன் ௧௦௭

தெத்தாத் திரயன்வரச் சேவித்தே காகூரத்தை
பத்தியொடு பெற்றதனைப் பல்காலஞ்—சித்தமுற ௧௦௮

ஐங்கரர்தாட் போற்றவரு ளாயிரங்கை காலிரண்டு
தங்கசர ஸமைந்தாலுந் தன்னியே—அங்குகதப ௧௦௯

காலமுற்றும் வாழ்ந்து களித்துலகம் போற்றிசெயச்
சீலமுத்தி யீந்த திறம்போற்றி—தாலமிசைத் ௧௧௦

தங்குமிந்திர மானஞ் சரித்தோங்க வோர்விரதி
அங்குவாச் சூர்சேன னையுங்கால்—புங்கவிமா ௧௧௧

னம்மொன்று மேவவஃ தவ்வூர்ப் புகைச்சிலையக்கொண்
டிம்மெனச்செல் காலத்தவ் விந்திரன்றேர்—திம்மென் ௧௧௨

றெழுந்தேக மன்னன்கண் டேதென்னத் தூதர்
தொழுஞ்சதுர்த்தி நைவேத்யந் துய்த்தே—அழுந்தத் ௧௧௩

திருநாம மூன்றுநாஞ் செப்பியபே றென்னப்
பெருமான் விரதத்தைப் பேணி—வருமாசி ௧௧௪

கிஷ்ண சதுர்த்தியினிற் கேடில்விர தம்பூண்டு
இஷ்டசித்தி பெற்றுநெடு நாளிருந்து—கஷ்ட ௧௧௫

இருவினையு மாய வினையில்விமா னத்தில்
துணைவரொடுஞ் சேர்க்கதுதி போற்றி—பணைபுயத்துங் ௧௧௬

கார்த்திகவீ ரன்வேட்டை கானகத்தி லாடிவரச்
சீர்த்திசம தக்கினியின் சேவையுறீஇ—ஆர்த்தவன்பால் ௧௧௭

நல்விருந்தூட் டுஞ்சிறப்பை நாடிவரு தேனுவினை
பன்முறைகேட் டயாப் பகைமையினால்—கொல்வதற்கு ககஅ

போர்தொடங்கி வெற்றியின்றிப் புக்கவனை வஞ்சனையால்
கோறல்செய்து ரேணுகையைக் கூரம்பால்—ஊறுசெயச் ககககூ

சோர்ந்திருந்தாள் ராமனெனுந் தோன்றல்வரக் கண்டழுதாள்
சார்ந்தவினை யோர்ந்துருத்துத் தங்குரவர்—சேர்ந்த கஉ0

வழிக்குத் துணையா வருசருமஞ் செய்தான்
விழிக்கிடனாய்ச் சொற்றமனு வின்படி—செழித்தமத கஉக

மாமுகவற் போற்றவருண் மாபரசும் நீள்வயதும்
ஏழுறப்பெற் றோங்குமிசை போற்றி—சோம கஉஉ

சேகரனார் வாழ்கயிலை சேர்ந்தன்பால் ராவணன்றன்
சோகமறச் செய்தவத்தைச் சூழ்ந்தரனார்—போகமுறத் கஉங

தந்தசிவ லிங்கத்தைத் தன்கைக்கொண் டேகுமுழி
வந்தசிறு மைந்தன்கை வைத்தகல—நந்தன் கஉச

நிலத்திலிடப் பேர்த்தெடுத்தும் போகா தொந்து
சலத்தோடிக் குட்டத்தா னோங்கிப்—பலத்தால் கஉரு

வானி லெடுத்தெறிய வன்மைகுன்றித் தான்வணங்கித்
தேனனைய தோத்திரங்கள் செப்புதலும்—கடையகைக் கஉசு

கொண்டென் றலையினிடைக் குட்டிக்கொள் ளென்றுசொலி
கண்டுவந்த கீர்த்திக் கதைபோற்றி—பண்டொருகால் கஉஎ

சூரபத்மன் றன்னாற் றுயருற் றகன்மகவான்
சீர்காழி யென்னுந் திருப்பதியில்—போன்பால் கஉஅ

நந்தனமொன் றாக்கி நறுமலரால் சங்கரனை
வந்தனைசெய் தேற்றும் வகைதடுக்க—முந்துசுரர் கஉகூ

வான்வறக்கச் செய்திட்டும் வந்தடைந்த நாரதனைத்
தான்பணிந்து கேட்பத் தவனுரையால்—மேன்மைக் ௧௩0

கணபதியைப் போற்றவவர் காகமதாய்ச் சையக்
குணவகத்தி யன்சாகங் கொட்ட—இணைகங்கை ௧௩௧

சென்றகன்ற காவிரியாய்ச் சேர்ந்து வளம்பெருக்க
நின்ற முனிமுனிய நீள்வடிவை—நன்றவனுங் ௧௩௨

கண்டுகுட்டிக் கொள்ளக் கமண்டலத்தைத் தானிறைத்துக்
கொண்டருளும் பெற்ற குணம்போற்றி—தொண்டுசெயும் ௧௩௩

வேதா மனத்தால் விளங்கேழ் புதல்வருக்குள்
மேதாவாங் காசிபனார் மேன்மையுற—ஓதியருள் ௧௩௪

ஏகா க்ஷரத்தை யினிதுசெபித் தாயிரமாண்
டோகார வைங்கரனை ரோங்குதவம்—வாசாகச் ௧௩௫

செய்யதிவ்ய மேனிகொடு சேர்ந்தருளி மூஷிகமேல்
துய்யதிருக் காட்சிதரத் தொண்டொழூந்—ஐய ௧௩௬

அடியே னுயிர்க்குலங்க ளாக்கவெண்பா லன்பாய்
நெடியகஸ்ய பந்தனொ நீரும்—முடிமதலை ௧௩௭

ஆகவெனப் போற்ற வருள்செய் தவன்மக்கள்
ஏகமொடேழ் மந்திரத்தை யோதிவர—ஓகையொடும் ௧௩௮

வள்ளலா ராங்கவர்க்கு வாய்ந்தவரந் தந்தருளிப்
பிள்ளையா ரானபெருஞ் சீர்போற்றி—வள்ளலருள் ௧௩௯

நாடியபா சத்தேத்து நல்லோ ரடைந்தவரம்
தேடியுரைத்தோ மினியத் தேவர்பிரான்—ஆட்செயும் ௧௪0

லீலையவ தாரங்க ளேனோ யுரைக்கவென்னுள்
ஆலயனைப் போற்றி யருள்போற்றி—தாலமிசை ௧௪௧

## லீலாகாண்டம்.

வக்ரதுண்ட மூர்த்தியா வந்தவவ தாரத்துத்
துக்கமற மாற்றியதொல் சீர்போற்றி—தக்கதமிழ் கசஉ
நாடா ளபிசித்து நல்வரத்தாற் பெற்றமகன்
வாடாக் கணனென்பான் மாதவஞ்செய்—தேடார் கசங
நறுங்கொன்றை வேணியனார் நல்லருளாற் குன்றாப்
பெருஞ்செல்வம் நீள்வலியும் பெற்று—வருந்தாமல் கசச
மூவுலகும் வென்று முடிசூடி யாளுங்கால்
மாவனத்துவேட்டைக்கு வந்திளைத்துத்—தேவர்தொழுஞ் கசரு
சீர்கபில மாமுனிவர் சேர்ந்துறை யாசிரமத்தில்
நீர்மையொடும் போய்விருந்து நீடுதவும்—பேர்மருவு கசசா
சிந்தா மணிமகிமை தேர்ந்தினிது கேட்டவவர்
மைந்தா நமக்குயிராய் மன்னுமென—நொந்தவனை கசஎ
வன்பாற் கொடுபோக மாமுனிவன் முன்முனிந்து
முன்னிற்கே லென்றுதவ முற்றிருந்தாங்—கன்புசெய கசஅ
ஐங்கரனே மாக்கினியி லாங்குவரக் கண்டொறுத்து
துங்ககணன் வீரமெலாந் தூள்படுத்துத்—தங்குபிதா கசகூ
வந்துதரச் சிந்தா மணிமுனிக்கீந் தாங்கவனும்
தங்களத்தி லிட்டவிநோ தம்போற்றி—செங்கமல கருO
வேதியனார் கொட்டாவி விட்டதனா லுற்பவித்துப்
போதருசிந் தூரனெனும் பொற்புடைய—தீதார் கருக
நெடியவுடல் பற்றுமுடி நீமெனும் வீச
அடிதொழுவாற் கண்டுவிதி யன்றி—முடிவறியான் கருஉ
நல்வரங்கள் தந்து நனிமீ பகைத்தோனை
புல்லிமீ ருக்குகெனப் போதித்துச்—செல்வ கருங

விடுத்தவனை யேதழுவ மேவப் பயங்கொண்
டடுத்தவிண்டு சொற்கேட் டகன்று—கடுத்தேகி ௧௫௪

ஈசனிடஞ் சென்றங் கெதிர்ப்பக் கணபதிவந்
தாசகல நீக்கு மருள்போற்றி—பேசவனை ௧௫௫

மாய்ப்பதற்கா வம்பிகைபால் வந்துதிப்ப வஞ்சனையாத்
தாய்வயிற்றிற் சிந்தூரன் சேய்தலையைப்—போயறுக்க ௧௫௬

அன்னசெய லீச னறிந்துமுனந் தான்போற்றும்
மன்னுமகே சன்யானை மாத்தலையைத்—துன்னி ௧௫௭

வருமைங் கரமூர்த்தி வானவர்கள் போற்றப்
பொருதடர்ந்த சிந்தூரனைப் போக்க—வருஞ்சீர் ௧௫௮

விராட்டுருவங் கொண்டவன்றன் வீரமெலா மாய்த்துத்
தராதலங்க ளுய்யவவன் றன்னை—நிராகரிக்கப் ௧௫௯

பற்றிக் குழைத்துப் பருமத் தகத்திலிட்டுக்
குற்றமற முத்திகொடுத் தாய்போற்றி—மற்றுமொரு ௧௬0

கோணபிரந் தன்செய்யுங் குற்றமுள யாகத்தைத்
தாணிந்தத் திந்திரனுஞ் சார்ந்துழப்பும்—மாகால ௧௬௧

ரூபி விலக்கி நெடிதுசெயும் விக்கினத்தால்
கோபித்துந் தேவரொடுங் கூர்முனிவர்—தாபித்துத் ௧௬௨

தஞ்சமென வைங்கரர்நாட் சார்ந்துதொழத் தாமிரங்கி
அஞ்சலெனக் கூறி யரியதவ—மஞ்சன் ௧௬௩

சவுபரியா மாமுனிவன் சாருமனேன் மன்னைய
அவமதியாற் காந்தருவ னன்னைத்—தவமுனிவன் ௧௬௪

மூஷிகமாய்ப் போகியென முன்னின் றவன்பணியத்
தோஷமற வைங்கரனூர் தொல்பரியாய்—பாச ௧௬௫

விநாயகல்க வென்ன விளங்குபரா சன்பால்
துணையொன வைங்கரர்நாஞ் சார்ந்து—மனமகிழும் ௧௬௬

அன்பால் வளர்ந்துவர வாச்சிரமச் சாரலுந்த
வன்பாகு வந்து வருத்துதலும்—முன்பார் ௧௬௭

விநாயகர்தம் பாசத்தை விட்டதனைப் பற்றித்
தனதெதிரே கொண்டுவரத் தாழ்ந்து—சனதரனை ௧௬௮

வாகனமாக் கொள்கவென மற்றவ் வரமளித்து
மோகவிக்னன் றீவினையு மோசிக்க—ஊகமொடு ௧௬௯

அங்குசத்தை யேவ வவற்கொண்டு முன்விடலும்
மங்கி யவன்பணிந்து வாழ்த்திடலும்—அங்கருணை ௧௭௦

யாலே யடியர்க் கநுகுணனு கென்றவன்பேர்
மேலாக்கிக் கொண்ட விறல்போற்றி—தோலாத ௧௭௧

சங்காசு ரன்கமலா சூரனெனச் சாரவுணர்
அங்கமலன் போற்றிசெய மாரணங்கள்—தங்களாற் ௧௭௨

கொண்டு கடலொளிப்பக் கூர்ந்தரன்பாற் சென்றுனொக்கக்
கண்டவர்சொற் கேட்டுக் கணேசரடித்—தொண்டுசெய ௧௭௩

ஆங்கவர்மல் லாலொன வாரணங்க டாங்கொரும்
ஓங்குமடி யாருடனே யொண்புவியில்—பாங்குடைய ௧௭௪

சுந்தராசச் சிர்மத்திற் றோன்றிமுனி வோர்பணிய
விந்தையுற வீற்றிருக்கும் வேலையினில்—துங்கமுறுஞ் ௧௭௫

சங்காசு ரன்கேட்டுத் தம்பிகம லாசுரனை
அங்கனுப்ப வைங்கரனு மாய்ந்தான்று—சங்கைபிலா ௧௭௬

போரிற் கலக்கப் புறங்காட்டிப் பின்வரலும்
சீர்பூத்தி தேவி செறுத்துடனே—வீரமெலாம் ௧௭௭

போக்க வெகுண்டு புணர்த்துபல மாயையினால்
ஊக்க முனிந்தம்ம னுடன்றருமோர்—சேய்க்குத் ௧௭௮
திருப்பெயரி லாபனெனச் செப்பவரம் பெற்றே
உருத்தெழுந்தம் மாயபடை யோட்டித்—தருக்கி ௧௭௯
விநாயகர்தாள் போற்றிசெய வேதமயின் மேலாய்த்
தனதுதிறல் காட்டச் சமர்செய்—தனதுமுனம் ௧௮௦
பாசத்தாற் கட்டிவரப் பாதம் பணியாது
வீசுபடை பற்பலவின் வீறுகெட—வாகிக் ௧௮௧
கமலாசு ரன்மூன்று கண்டமதாய் வீழத்
தமருலம் விட்டதனை போற்றி—அமைதலத்தில் ௧௮௨
பேர்கண் டகநகரிற் பேரரசு செய்திருந்த
சீர்சக்ர பாணியெனச் செப்பரசன்—ஓர்மகப்பே ௧௮௩
றின்றிவனஞ் செல்ல வெழுங்காற் சவுனகர்வந்
தொன்றியுரை ஞாயிறுமா வொள்விரதம்—இன்றுமுதல் ௧௮௪
செய்துவரு கென்றுமனுச் செப்பவவன் செய்துவர
உய்யவுயர் மார்த்தாண்ட னொருருவாய்—வையந்
தலைவனைப்போ லுக்கிளையைச் சார்ந்துகரு வீந்தான்
குலவுமனத் தேவியுளா கொண்டு—அலைவின்மனத் ௧௮௬
தாங்கவனுந் தேவ வனுக்கிரக மென்றுகண்டு
பாய்குடன்சேய் காண்பருவம் பார்த்திருக்க—வீங்குமுலை ௧௮௭
தன்கருவால் வெப்புஞ் சகியாது சிந்துரநி
மன்களையைச் சேர்ந்து மகவளிக்க—அன்னமகன் ௧௮௮
செஞ்சடையு முக்கண்ணுஞ் சேர்கரத்திற் சூலமொடு
வெஞ்சக் கரத்தினொடு மேவுதலும்—அஞ்சியவன் ௧௮௯

தோழியொடுஞ் சோபமுறச் சூழ்வருணன் றன்கொணர்ந்து
ஆழியர சன்முன்விட வாங்கவனும்—வாழியெனச் ககo
சிந்துவெனும் பேர்தரலும் செல்வமொடு தான்வளர்ந்து
வந்தசுக்ர னேதுமனு வாற்பரனை—வந்தனைசெய் ககக
தாற்றுங் கடுந்தவமீ ராயிரமாண் டாதித்தன்
போற்றுபிம்பத் துட்சிவனைப் பூசிக்க—ஊற்றுமருள் ககஉ
வாரியவன் முன்றோன்றி யாதரித்த பின்வரந்தந்
தோரிமைப்பிற் செல்ல வுடனெழுந்து—பார்முழுதும் ககங
வானும் பிலனு மலைந்துபோர் விண்டுமுதல்
ஏனையரை வன்சிறையி லிட்டதறேல்—தீனரையாள் ககச
ஜலந்தரனார் முக்கணொடு மம்மையிட்டுத் தாறுபுயத்
துங்கைமக ளுக வலதரித்துப்—பொங்குசிந்து ககரு
மாவுணன் விட்ட வகைத்திறல்சேர் பல்படையும்
ஜலசந்தி னிப்பின வுறத்திடலும்—கோபித்தே ககசு
ஜயன் மயூரமிசை யாரோகணித்தெழுந்து
வெய்யபடை பற்பலவும் வீசிவிடக்—கையனுடன் ககஎ
தன்படையான் மாற்றிச் சதுரோ டனந்தமுறை
வன்படைகள் மாறிவிட மாயையினாற்—புன்னடைசெய் ககஅ
வீறுமுற்று மாற்றி விடுத்தவன் சூலத்தைக்
கூறுசெயத் தன்பாசங் கொண்டுவிட—மீறியது ககக௯
வீரமெல்லாம் போக்கி விளைந்தவனைக் கூறுசெய
சீரடியிற் றுழுந் திறம்போற்றி—பேர்பெரிய கஉo
விந்தியதே யத்தில் விளங்குமணி பாதிநகர்
வந்தான்றா மாசுரனு மன்னவர்கோன்—சந்ததமு கஉக

௩அ விநாயகர் திருப்புகழ்போற்றிக்கலிவெண்பா.

மந்திரிய ரெண்மரொடும் வாய்ந்தமனை யைவர்தரும்
மைந்தரொரு நால்வர்தொழ, வான்பணிய—விந்தையொடும் ( )

அஷ்ட வயிஸ்வரிய மார்ந்தரசு செய்திடுநாள்
இஷ்ட பிருகுமுனி யிங்கடையத்—திட்டமுறத் உ0௩

தாள்பணிந்து போற்றித் தகைசான்ற செல்வமொடு
மேன்மைசிவ பத்தி மிகுந்திடவும்—தானவருள் உ0௪

தோன்றியதற் கென்னைமுனந் தொல்வினையென் றெனவை
ஊன்றுமுனி யுன்னியுரைசெய்வான்—ஆன்றோனே உ0௫

சென்மாந் தரம்விருதிச் செல்வமன்ன ராய்ப்பிறந்து
அன்னதிற்செய் தானமக வந்தத்தில்—உன்னியமால் உ0௬

நாரதனை யேவ நயந்தவன்வேண் டல்லானைச்
சீரலவென் றேமறுக்கச் சீற்றமுற்றே—யீரிங் உ0௭

கவுணருரு கச்சபித்தா ரேதுவிரு லென்னைத்
தவணமொடு முள்ளந் தளர்ந்தான்—தவமுடைய உ0௮

மாதவரு மன்னன் மனைவி சுமேதையொடும்
ஏதமுறு மாதவஞ்செய் தென்றகருப்—போதருங்கால் உ0௯

ஆமாரு ரன்மடியத் தொல்வாக்கு தோன்றவொத்து
ஏமாறித் தன்படையை யேவுதலும்—தாமேவி உ௧0

நள்ளிரவின் மாதவனை நன்மனையைப் பள்ளியொடும்
கள்ளமதாய்க் காட்டிற் கரந்துசெல—தெள்ளருள்சேர் உ௧௧

செங்கரமு மேவுபடை யாங்கவனைக் காத்தளிக்க
பங்கமுறும் தாமாரு ரன்படைந்து—தங்கியபின் உ௧௨

தன்னினத்தாற் சிற்றஞ் சமைந்துபடை யெடுக்க
அன்னதனைப் பாலசந்திர னைவங்காரதர்—தன்யகருப் உ௧௩

பாலுண்ட வாயிற் படர்வித்த வான்புகையால்
மாலுற்றுத் தூமாசு ரன்மடிய—வேல்பெற்று ௨௧௪

மாதவமா ராஜன் மனைவியொடு நாடணைந்து
ஏதமிலா வின்பமிக வீன்றளித்துப்—பூதலத்தை ௨௧௫

ஆண்டு நெடுங் கால மரசுமகற் கீந்தன்பால்
வேண்டுமுத்தி தந்த விறல்போற்றி—ஈண்டுங் ௨௧௬

கணேச ரவதார முபாசனை காண்டங்
குறுநி சயமோடுங் கூறும்—பணுமுடியார் ௨௧௭

வாழ்க்கையிலே மால்வரையின் வன்மையனைத் துங்கூறில்
சார்வசந்த காலத்திற் றமகிழ்ந்துங்—கேழ்புவியும் ௨௧௮

ஈன்றெடுத்த வம்மையொடு மெந்தையுத்தி யானைத்தில்
வான்போற்றச் சென்றுலவி வந்திடுகால்—மென்மைமித்ர ௨௧௯

மண்டபத்தைக் கண்டிரண்டு மால்யானை தாம்புனைந்து
கண்டகர் தாமிருவர் கண்டிருக்க—அண்டர்பிரான் ௨௨௦

ஐங்கரனோர் தாமகவா யாங்குவரக் கண்டெடுத்துப்
பொங்குபுள காங்கிதமாய்ப் போந்தமனை—தங்கவைத்துப் ௨௨௧

போற்றி யுலகமெலாம் பூசைசெயத் தாமகிழ்ந்து
மாற்றரிய வின்பால்வட் டாடுங்கால்—சீர்த்திருமால் ௨௨௨

சான்முகச் சூள்பேசித் தாய்வெல்லச் சங்கரத்தா
என்றுரைக்கச் சீறி யீடுசாடயங்—கான்றிரியும் ௨௨௩

பாம்பாய்க் கணபதியாற் பாவமறக் காத்திருக்கத்
தேம்பிவருந் தேவர் சிறைநீக்க—ஆம்பன்முகா ௨௨௪

சூரனடல் போக்கத் தொடாசலன் றேன்மேலாய்
வீரப்பு தப்பணிகள் மேவிவரப்—பேரிசங்க ௨௨௫

உஉ விநாயகர் திருப்புகழ்போற்றிக்கலிவெண்பா.

யாடுதல்போற் கொன்ரு ரவர்பதத்தைச் சேருதலும்
நீடுமொரு வாவியன்னை நீர்குடையத்—தேடுதல்போல் உ௫௦
ஆங்கிறங்கித் தாஞே ரடல்சேர் கராமுதுகில்
ஓங்கிவினை யாடிதுறை யுற்றிட்டும்—சோங்கியதோர் உ௫௧
சித்ரனெனும் காந்தருவச் செல்வன்ருன் முன்வந்து
அத்தனைத்தாழ்ந் தாங்கவன்சா பந்திர—முந்திகொடுத் உ௫௨
தக்கா சிபாரிடத்தி லாகாஊ ரும்புருவென்
பிக்கதவர் வந்தேற்றும் விக்கிரகம்—ஒக்கமறைத் உ௫௩
தாரிவற்றைக் கேட்டதந்தைக் காவென்றுவாய்திறக்க
சிரியவந் தேவர்கடாஞ் சேருலகை—நேர்கண்டு உ௫௪
எந்தையடி தாழ்ந்தேந்த வீறிலவற் றைக்கொடுத்து
மூன்றுமைந்தாண் டாக விதிமுறையே—தந்தை உ௫௫
உபாயமுஞ் செய்விப்பா ரேழர்ந்துவாக்கத் தேவர்
தவமுனிவர் யாவர்களுஞ் சார்ந்த—சபைநடுவில் உ௫௬
பிங்கலனை யாஇயைந்து போரவுண ரந்தனையாய்
அங்ஙனடைந் தகதைதயா மம்புவிட—எங்கள் உ௫௭
பெருந்தவத்தால் வந்தபிள்ளை பெற்றியறிந் தைந்து
இருந்த கஷ்ஜதைகொடவர்ச் செற்றார்—வருந்தேவர் உ௫௮
காணிக்கை யாகக் கவின்சேர் பிறைகமுதல்
பூணுமணி பற்பலவும் போரோடும்—காணும் உ௫௯
அவைரவருக் குள்ள வரும்பொருள்போர் தந்தார்
இவர்மகிழ்ந்து கொண்டா ரினிதாய்—அவரவர்கள் உ௬௦
சென்றதற்பின் றேவேந் திரனொருவன் சேர்செருக்கால்
நன்றியின்றி வாயுவொடு நற்கனலை—அன்றேவ உ௬௧

நின்றபிரான் புன்னகையால் நீக்கிவிஸ்வ ரூபமெடுத்
துன்னமக வானையுமோ ரண்டத்தில்—துன்னவிட் உ௬௨

பீண்டுவரச் சக்தியின்றி வீறடங்கிப் போற்றிசெய
ஆண்டருளு மொப்பி லருள்போற்றி—வேண்டியவா உ௬௩

பொற்பட்டும் பல்பணியும் பூண்டுபட்டை தாங்கிமிகு
மற்பொருவி லாச்சிங்க வாகனமேல்—பற்பலபதஞ் உ௬௪

சென்று விளையாடி வந்துசேருங் காற்காசிநகர்
வென்றிமன்னன் செய்யும் விவாகத்துக்—கொன்றன்பால் உ௬௫

காசிபனை வேண்டத்தன் காதலனைக் கூட்டிடலும்
நேசமொடு தேரின்மிசை நேர்ந்தேறி—ஆசகலச் உ௬௬

செல்போதிற் றாமாசுரன் செய்தவத்தாற் சோதிதரும்
வல்லமைசேர்ப்படையை வன்கையால்—ஒல்லெனக்கொண்

டாங்கவன்மேல் வீசி யருஞ்சிரத்தைக் கொய்திட்டும்
ஏங்கியவன் மக்க ளெதிர்த்துவர—ஓங்கவரைக் உ௬அ

கண்டுபெரு மூச்சுவிடக் கட்டோ டவர்மாண்டு
மண்டுநராந் தன்கொலுச்செய் மண்டபத்தில்—விண்டிருளக் ( )

கண்டுவெருண் டோடிக் கனல்போற் கொதித்தைந்தா
றெண்டோளைய சூர்தமை யேவுதலும்—மண்டியவர் ௭௦

ஆதவனை மேகம்போ லாங்கிரதஞ் சூழ்ந்திடலும்
நாதன்கோ பத்தெழுந்த நாதத்தால்—சேதமுறீஇ உ௭௧

மாண்டவகை கேட்டு மதித்தரிய மாயைவல்ல
ஆண்டகைய சூர்தமை யாங்கனுப்ப—ஈண்டிநகர் உ௭௨

எல்லைதனிற் றேர்செல்ல வெண்ணிலவாங் காரமொடு
பல்லோர்முன் வந்து பணிந்துவரச்—செல்காலை உ௭௩

வஞ்சமறை யோர்வடிவாய் வாய்ந்தபெருங் காற்றாகி
விஞ்சு மிடரவுணர் வீறடக்கி—மஞ்சுதவழ் உஎச

மாளிகையுட் செல்காற் மறித்தகூ டாசுரனை
நாளிகே ராஸ்திரத்தா னன்றகற்றி—கேளிரொடும் உஎரு

மாமனையுட் புக்கு மலரணைமேல் வீற்றிருந்தார்
காமருல கேத்தக் கருணைசெயூஉ—மாமலயோன் உஎசு

மன்னன் புரோகிதனு மாதரும நந்தனென்பான்
இன்மொழிகள் பேசி யெமதிறைக்குத்—தன்மகளாஞ் உஎஎ

சித்திபுத்தி தன்னைத் திருக்கல்யா ணஞ்செய்ய
பத்திமனக் கேகப் பகையசுரன்—புத்தியின்றி உஎஅ

விட்டவிருகழுகை வேழமொன்றன் வீறடக்கி
பட்டழிக்கத் தூமாக்ஷன் பன்னிவந்தங்—கிட்டவிடம் உஎகூ

மாற்றியபின் றங்கிவழுவைச் சடங்கியற்றி
போற்றி மன்னன் கோயிலிடைப் புக்கிருந்தார்—சீற்றமொடு[illegible]

வந்தவொரு மூன்றவுணர் மாருதமாய் வெய்கனலாய்
அந்தகர் தன்னை யதஞ்செய்ய—நொந்தகலும் உஅக

வாயிலிடைட் வேங்கையாய் வந்துதடுக் கின்றதனைப்
போயரசற் குற்றுப் புகன்றிட்டும்—நாயகனார் உஅஉ

தன்கைக் கமண்டலநீர் தன்னுற் றணிந்தொழித்தே
அன்பர்களைக் காத்த வருள்போற்றி—பன்னியொடு உஅங

மன்செய் பணிகொண்டு வாய்ந்தபுரு சுண்டிமுனி
தன்னன் பளித்த திவேதனைத்தா—[illegible] உஅச

கூட்டிபுணக் கண்டாசன் கூட்டிவந்து தன்மனையில்
ஈட்டவிய ஜுண்ட வொருநிலே—காட்டியபின் உஅரு

சோதிட்டநூற் கூறுஞ் சுரனுக்குச் சூட்டுமுத்துச்
சீதவட்டம் போட்டொழித்த சீர்போற்றி—போதொருநாள் ()

கூபனொடு கந்தனெனக் கூறு மிரண்டவுணர்
மாதவனை யாய்க்கிணறாய் வந்திருக்க—ஆதவன்போல் ௨௮௭

உள்ளிறங்கிக் கூப முழக்கித் தவனைதனை
துள்ளிவிழக் கொன்று தொடர்ந்துவருந்—தள்ளரிய ௨௮௮

துங்காசு ரன்னம்பா சூரனந்த காசூரன்
மங்கா தவனை மறைத்திருளாய்க்—கங்கைநகர் ௨௮௯

சூழ்ந்தமலை யரிகித் தொடர்மேகமாய்ப்பொழிய
வீழ்ந்தவெள்ள மேன்மேல் விரிந்திட்டலுஞ்—சூழ்ந்தங் ௨௯௦

கருளுரு மகோற்கடமா வன்னெ லாற்புள்ளாய்
வருகிறகான் மேகத்தை வாட்டி—இருண்மலையைத் ௨௯௧

தூளாக்கி நெற்றிவிழித் தோன்றுகனல் காரிருளை
மீளா தடக்கிவெள்ள மீறடக்க—மாளா ௨௯௨

தவர்வேட் டுய்வலையா யால்மர மாகி
இவரை வலைப்படுத்த வெண்ணிக்—கவல்போகில் ௨௯௩

புள்ளான வெம்பெருமான் போந்தவரைக் கைக்கொண்டு
தள்ளாத் தவலோகந் தான்பரந்தே—எள்ளி ௨௯௪

விடுத்திட்டும் பெற்ற பிரமனைதன் வீட்டில்
பொடித்துவிழக் கண்டு புலம்பி—விடுத்தவொற்றர் ௨௯௫

வந்துபத்தும் காசூரன் மாய்ந்தசெயல் தாமுரைக்க
வெந்துமிகச் சீறி வெகுண்டெழுந்து—நந்தியாமம் ௨௯௬

கொல்வே னெனவதிரக் கோலமொடு சென்றவனல்
செல்காசி யிற்கண்டு சீற்றமுண்டி—நல்கி ௨௯௭

## ௨௬ விநாயகர் திருப்புகழ்போற்றிக்கலிவெண்பா.

வஞ்சமறை யோர்வடிவாய் வாய்ந்தபெருங் காற்றுரு
விஞ்சு மிடரவுணர் வீறடக்கி—மஞ்சுதவழ் ௨௭௪

மாளிகையுட் செல்கால் மறித்தகூ டாசுரனை
நாளிகே ராஸ்த்திரத்தா னன்றகற்றி—கேளிரொடும் ௨௭௫

மாமனையுட் புக்கு மலரணைமேல் வீற்றிருந்தார்
காமருல கேத்தக் கருணைசெயூஉ—மாமலரோன் ௨௭௬

மன்னன் புரோகிதனை மாதரும தத்தனென்பான்
இன்மொழிகள் பேசி யெமதிறைக்குத்—தன்மகளாஞ் ௨௭௭

சித்திபுத்தி தன்னைத் திருக்கல்யா ணஞ்செய்ய
பத்திமனைக் கேகப் பகையசுரன்—புத்தியின்றி ௨௭௮

விட்டவிருகழுதை வேழமொன்றன் வீறடக்கி
பட்டழிக்கத் தூமாக்ஷன் பண்ணிவந்த—திட்டவிடம் ௨௭௯

மாற்றியபின் றங்கிவழுவைச் கடங்கியற்றி
போற்றி மன்னன் கோயிலிடைப் புக்கிருந்தார்—சிற்றமொழு( )

வந்தவொரு மூன்றவுணர் மாருதமாய் வெங்கனலாய்
அந்தகர் தன்னை யதஞ்செய்ய—நொந்தகலும் ௨௮௧

வாயிலிடை வேங்கையாய் வந்துதடுக் கின்றதனைப்
போயரசற் கூற்றுப் புகன்றிட்டும்—நாயகனார் ௨௮௨

தன்கைக் கமண்டலநீர் தன்றூற் றணித்தொழித்தே
அன்பர்களைக் காத்த வருள்போற்றி—பண்ணியொடு ௨௮௩

மண்செய் பணிகொண்டு வாய்ந்தபுரு சுண்டிமுனி
தன்னன் பளித்த நிவேதனத்தை—மன்னனன்பாற் ௨௮௪

கூட்டியுணக் கண்டரசன் கூட்டிவந்து தன்மனையில்
ஊட்டவகை யுண்ட வொருநிலை—காட்டியபின் ௨௮௫

சோதிடநூற் கூறுஞ் சுரனுக்குச் சூட்டுமுத்துச்
சீதவட்டம் போட்டொழித்த சீர்போற்றி—போதொருநாள் ()

கூபனொடு கந்தனெனக் கூறு மிரண்டவுணர்
மாதவனை யாய்க்கிணறாய் வந்திருக்க—ஆதவன்போல் ௨௮௭

உள்ளிறங்கிக் கூப முழக்கித் தவனைதனை
துள்ளிவிழக் கொன்று தொடர்ந்துவரும்—தள்ளரிய ௨௮௮

ஆங்காரு ரன்னம்பா சூரனந்த காசூரன்
மங்கா தவனை மறைத்திருளாய்க்—கங்கைநகர் ௨௮௯

சூழ்ந்தமலை யர்கித் தொடர்மேக மாய்ப்பொழிய
வீழ்ந்தவெள்ள மேன்மேல் விரிந்திடலுஞ்—சூழ்ந்தங் ௨௯௦

கருளுரு மகோற்கடமா வண்ணலாற் புள்ளாய்
வருசிறகான் மேகத்தை வாட்டி—இருண்மலையைத் ௨௯௧

தூளாக்கி நெற்றிவிழித் தோன்றுகனல் காரிருளை
மீளா தடக்கிவெள்ள வீறடக்க—மாளா ௨௯௨

தவர்வேட் டுய்வலையா யால்மர மாகி
இவளை வலைப்படுத்த வெண்ணிக்—கவல்போதில் ௨௯௩

புள்ளான வெம்பெருமான் போந்தவனைக் கைக்கொண்டு
தள்ளாத் தவலோகந் தான்பரந்தே—எள்ளி ௨௯௪

விடுத்திடலும் பெற்ற பிரமனைதன் வீட்டில்
பொடித்துவிழக் கண்டு புலம்பி—விடுத்தவொற்றர் ௨௯௫

வந்துபுகுங் காசூரன் மாய்ந்தசெயல் தாமுரைக்க
வெந்துமிகச் சீறி வெகுண்டெழுந்து—தந்திரமாய் ௨௯௬

கொல்வே னெனவதிரக் கோலமொடு சென்றவனெல்
செல்காசி யிற்கண்டு சிற்றுண்டி—நல்கி ௨௯௭

விட்டத்தாற் கொலைகுறிக்க மீண்டதனால் மாண்டான்
தொடுத்தடுத்தோர் தீமை துலைய—அடுத்தநகர் ௨௯௮

உள்ளாரு மன்னவனு மொப்பி லதிசயங்கொண்
டுள்ளா தரத்துதிக ளோதியபின்—பிள்ளைதனைத் ௨௯௯

தந்தமனை வந்தன்னந் தாமருந்த வேண்டுதலும்
அந்த னதற்கிசைந்தாங் காங்கிருந்து—பந்திமிகும் ௩௦௦

சுக்கிலற்குந் தேவிக்குஞ் சூழ்ந்தசன காதியர்க்கும்
ஒக்கவன்றி. யார்க்கு மருளுதலும்—அக்கால் ௩௦௧

நராந்தகனு மேவுமிரு நற்சகலன் சூலன்
வராநகரில் வந்து மகோற்கடனை—விராவியவர் ௩௦௨

தாண்பணியக்கூறுஞ்சமாதானச்சேதிகொண்டு
வாளாசற்குற்றுவருந்தூனைக்கத்—தோள்வலியால் ௩௦௩

சீற்றமொடுசெறு சமுத்திரங்கள் சூழ்ந்துவர
ஆற்றலொடுங் காசிநக ரண்மிவந்து—மாற்றரிய ௩௦௪

தீமைகளைச் செய்து செருக்களத்தில் வந்தடைய
சேமமுறு காசிநகர்ச் சீர்நிருபன்—தாமுந்தன் ௩௦௫

தன்படைகள் காகரம்போ னேர்ந்துதனைச்சூழ்ந்துவர
தாள்வலியாற்சென்றிரண்டுதானைகளும்—வாண்முதலாம் ௩௦௬

பல்படைகள்வீசிப் பரவியுத்தஞ் செய்போது
வெல்படையாற் காசியர்மன்வெற்றிபெற—நில்லென்ன ௩௦௭

சீறி நராந்தகனை நேர்தூறி லாடலொடும்
வீறியரசன் புதல்வர் மேலமச்சர்—போரடக்கிக் ௩௦௮

காவல்செய் தான்செய்தி கடிதொற்றர் சென்றுரைக்க
தேவியன்னைதான்போற்றத் தேர்ந்தெழுந்து—பாவியின்மேற்

சென்ற முகத்துநிந்த சீற்றத்தாற் பூதகணம்
ஒன்றுபத்து நூறு யிரந்தலையும்—வென்றிகரம் ௱௪0

அவ்விரட்டி தாங்கு மரும்படையு நீள்வடிவும்
செவ்வியவான் முட்டித் திகழ்ந்தடியை—அவ்வியமில் ௱௪௧

அன்பாற் பணிந்தங் கதிபன் குருரனென்பான்
வன்பசியை நீக்க வருந்துதலும்—முன்பார் ௱௪௨

நராந்தன்பெரும்படையை நன்றருந்திக்காசி
வராமன்னன் மக்களொடு மற்றோர்—இராமுன்பு ௱௪௩

கூட்டிவரு கென்றலுமே கொள்ளைகொண்டுண் டார்ப்பரித்து
வாட்டி நராந்தகன்கை வன்படைகள்—ஈட்டமெலாம் ௱௪௪

உண்டதற்பின்பாசுபதமோச்சுமுன்னமன்மகனைக்
கொண்டுகுழுவோடுவந்து கோமானைத்—தெண்டனிட் ௱௪௫

புன்னகைசெய்தன்பாற் புகழ்ந்திருப்பவீழ்ந்தெழுந்த
அன்னநராந் தன்மாயை யாலனந்தம்—வன்மை ௱௪௬

உகாந்தமழையா யுருத்தலைடலாக்கினியாய்
அகாதவளியா யெழுந்தங்காற்றுந்—தகாதபல ௱௪௭

மாயையெலாம் போக்க மறிந்தெழுந்த வஞ்சத்தைப்
போயொழிய வொன்றென்றுப் போக்கியபின்—காயமொடும்()

சீறியெழக்கண்டு சினந்துபிறு கம்வோத்துத்
தேறிவிடும்பாணஞ்சிரம றுக்க—மாறுதலை ௱௪௯

பெற்றுவரநோக்கிப்பெரிதுவிஸ்வருபமொடும்
அற்றவனைத்தாருகிராலாய்கழிக்க—சுற்றத்தார் ௱௫0

வாழ்மனையில்வீழ்ந்தருண்டவன்றலைகள்கண்டெடுத்து
மாழ்கியதேவாந்தனுடும் வந்தடைந்தங்—காழியென ௱௫௧

## உஅ விநாயகர் திருப்புகழ்போற்றிக்கலிவெண்பா.

வீழ்ந்துபுரண் டேகதறி மேற்பகையை வெல்லவெனச்
சூழ்படை வெள்ளத்தொகுதி துன்றிவர—பாழிநெடுந் ௩௨௨
தோட்டினவால் வெம்போர் தொடங்க மகோற்கடர்தாம்
வாட்படைக ளாறு வகைவிடுத்துக்—காட்டெரிபோல் ௩௨௩
மாய்த்திடவு மாயா வலியா னெடும்படைகள்
பேய்த்தேர்கள் போலப் பெருகிவரச்—சாய்த்தொழிக்க ௩௨௪
எம்பெருமான் றேவியரோ டென்று சித்திதேவிதரும்
நம்புமலர்கட் மாசித்தி நற்படைகள்—சம்பவித்துப் ௩௨௫
பொய்மி யெழுந்தேற்றூர் பொருப்படையெல்லா மழிக்க
தங்கியதேவாந் தன்றனு வெடுத்துச்—சிங்கமெனச் ௩௨௬
சீறிநெடும் போர்செய்யத் தேர்புத்தி தேவிதரும்
வீறுபெரும் பவுத்த விஸ்வனெழுந்—தீறுசெயத் ௩௨௭
தேவாந்தகனை யடுத்தே நின்றுமென் றிடவும்
ஓவாத சூக்க வுருவுகொடு—தாவிப்போய் ௩௨௮
தந்தையைச் சேர்ந்தாங்கோர் தனிமகஞ்செய் தாங்குறித்த
அந்தமிலாக் கார்பரிமே லாங்கடந்து—முந்துவர ௩௨௯
எந்தைமகோற் கடர்கண் டேற்றவன்செய் வெம்போரைச்
சிந்தியவன் பெற்றவரந் தீர்ந்தொழியத்—தந்திமுகம் ௩௩௦
பெற்றெழுந்தோர் கொம்பாற் பொருதவனைக் குத்தியகால்
பற்றறவீழ்ந் தாரொளியாய்ப் பாதமுற—மற்றதற்பின் ௩௩௧
காசிநகர் சென்றிருந்து காசினிமன் றம்போற்ற
ஆசிலருள் செய்தங் காசன்மகன்—தேசுபெற ௩௩௨
மாமணத்தைச் செய்வித்து வண்மைமிகு மன்னனெடும்
காமர்புரி வாரமொடெங் காசிபன்பால்—தாமணுகி ௩௩௩

வேண்டினர்க்கு வேண்டுவரம் மேன்மேலுமீந்தளித்தே
ஆண்டோர் பொற்கோயிலமர்ந்தருளி—சேண்டயங்கும் ௧௧௪

ஆனந்த மாப்வனத் தார்ந்தடிய ருண்ணிறைந்து
மோனந்ததும்பு முதல்போற்றி—மேனந்து ௧௧௫

கைவர்த்ததேயுத்திற் காண்பன்மகமென்னுஞ்
சைவத்திருநகரிற் சாரவுணன்—உப்பிரம ௧௧௬

சூரனென்பான் சுத்தவிர்த்தி தோன்றச் சிவனருளால்
பாரதவமீனுஞன் பயின்றிடலும்—வீரவரன் ௧௧௭

வேண்டுவரமியாது வினவென் றருள்செய்ய
ஆண்டவனைநோக்கி யடியென்கைத்—தீண்டினர்தஞ் ௧௧௮

சென்னியொடு நீறாகச் செய்யும்வரந் தாவென்ன
அன்னதளித் தேனென் றவர்தலையை—முன்றொட்டுக் ௧௧௯

காண்பலெனச் செல்லக் கரந்தருளினார் தொடர்ந்தே
ஆண்மையொடுந் தேடி யலையுங்கால்—மாண்டிருமால் ௧௨௦

இயவனைமாய்க்கத் தெளிந்தெழில்சேர் மோகினியாய்
ஆயவன்பாற்செல்ல வவன்மருண்டு—நாயகியே ௧௨௧

அன்புசெய வேண்டுமென வாதரித்துப் பின்றொடா
வன்புடனென் போனடன மாடிலினை—அன்புசெய்வேன் ( )

என்றலுமே முன்னின் றெதிர்நிழல்போற் கைநொடித்து
நின்றாடி நீர்கைதலை வைத்திடலும்—ஒன்றுடலம் ௧௨௩

நீறாகக்கண்டு நெடுமால் முகுந்தைசெல
ஆராமகன்கேட் டருந்தவஞ்செய்—தோரா ௧௨௪

பிரவருடஞ்செல்ல விறைவர்முன்பு தோன்றி
நிரவரங்களீந்து விசைத்தி—ராமகலை ௧௨௫

யன்றியெவராலு மழிவிலையென் றேயருள
நன்றிநினைந் தன்னரசு நாட்டியே—வென்றியொடும் ௩௪௫

மூவுலகுமாண்டு முடிக்கவின்று வாதியர்கள்
தாவிவந்துகாசிகர் தாமடையப்—பாவிலங்கு ௩௪௬

போர்தொடங்கப் புங்கவர்கள் போந்தடைந்தார் கேதாரம்
சேர்ந்தது ராசன்காசி நின்றிருந்து—பார்முழுதும் ௩௪௭

ஆண்டனர்த்தஞ் செய்ய வமரருமை தாள்பணிந்து
வேண்டவரு மென்றடி விநாயகர்தாம்—காண்டகைய ௩௪௮

ஐந்துமுகம் பத்துகர மார்ந்துசிங்க வாகனமேல்
விந்தையொடும் விளங்கி வீறுபகை—அந்தமுற ௩௪௯

வில்வாண் முதற்படையால் வெம்போர் தொடர்த்திட
வெல்படையற் றேயவுணன் வீழ்கெட—நல்லமைத்தை ௩௫௰

உன்னியன்னை யன்று றுயர்முடிமேற் றுதுன்றி
மன்னியகா சிப்பதிமேல் வாய்தலிலே—இன்னலறப் ௩௫௧

பாதகங்க ணீக்கிப் பரனருளைச் சிந்தித்து
இதகல வைத்த திறம்போற்றி—ஆதியிலே ௩௫௨

பாற்பகற்பந் தன்னிற் பகர்சுவா யம்புமனு
மேற்பதத்தைச்சேர விரிந்தசகம்—காப்பிரிந்து ௩௫௩

காடாக வேதாக வன்றுதிரி புஞ்சயனைத்
தேடியரசிந்து திவோ தாசனெனா—நாடிவைக்க ௩௫௪

செங்கோல் செலுத்திச் செழித்தோங்கத் தேவர்களை
அங்காசிநீங்க வகற்றுதலும்—புங்கவர்கள் ௩௫௫

துண்டி விநாயகருஞ் சூழ்ந்ததிரு மாலும்வந்து
விண்டவிகற்பாகமத்தைமெய்க்கொண்டு—தொண்டுசெய ௩௫௬

ஆங்கவனை முத்தியுல சாளவைத்த நீள்கருணை
தேங்குமென்டி நாயகர்தஞ் சீர்போற்றி—ஆங்கொருகால் ௩௫௭

சத்தியலோ கத்தமரர் சார்ந்த பெருஞ்சபையில்
வித்தகவே தாவணைமேல் வீற்றிருக்கப்—பத்திசெயும் ௩௫௮

மைந்தருக்குண் மேலா மரீசிமுனி தாள்பணிந்தே
எந்தைபுரி முத்தொழிற்கு மீசனெவர்—அந்தமறி ௩௫௯

யெனுரைக் கூறியரு ளென்றுதொழ லும்பிரமன்
ஆனமுத லெச்சிந்தித் தாங்குரைப்பான்—மானமைந்த ௩௬௦

தேறாது யானுந் திருமாலு முன்னொருகால்
மாறாய்ப் பரம்பொருளென் றேமதித்தங்—காறாத ௩௬௧

போர்தொடங்கிச் செய்யப் புராந்தகர்தீப் பூதரமாய்
நேருருக்கொண் டெங்கண்முனை நின்றிடலும்—பாரவொரு ௩௬௨

கேழலுருவாய் விண்டு கீண்டடியைத் தேடிநிற்கச்
சூழ்முடியை யன்னமதாய்ச் சூழ்ந்துழல்யான்—மாழ்குதலும் ௩௬௩

ஆரணமுந் தேட்டற் கரியபிரான் முன்னின்று
பூரணமாய்த் தோன்றியருள் புரிந்து—காரணனாய் ௩௬௪

எம்மையளித் தித்தொழிலு மீந்துநிறைந் துள்ளிருந்து
மும்மையினுங் காக்கு முதலாகி—அம்மவுயர் ௩௬௫

தேவேந்த வாருஞ் சிவமாம் பரஞ்சுடராம்
ஓவாவிநாயகனென் றோதுமறை—ஆவா ௩௬௬

எமக்கு மகேசன்முன் னிசைத்த வறுபூதி
உமக்குரைக்கக் கேளென் றுணர்த்த—சமப்புதல்வன் ௩௬௭

மானதவா விக்கரையின் மன்றுமவே றாயிரமான்
டானதவஞ் செய்ய வருள்சுரந்து—வானமிலகு ௩௬௮

## ௩௨. விநாயகர் திருப்புகழ்போற்றிக்கலிவெண்பா.

மாமணிப்பூண் மூஷிகமா வாகனத்தின் மேற்றோன்றி
காமர்மழு வேந்துங் கணபதியார்—தாமனுதி ௧௬௯

வேண்டுவா ரியாது விளம்பென்ன வீழ்ந்திறைஞ்சி
ஆண்டவனே நின்னன் பளித்தருளி—காண்டகைய ௧௭௦

மூவுலகுங் காவல்செய முப்பத்து முக்கோடி
தேவர்களொன் றுனை திறம்பாமல்—பாவனைசெய் ௧௭௧

தென்னைப்பூ சிக்க வினியகுண மக்கள்பெற
நின்னைதுவாமத் துமையுநேர்மகளாய்—மன்னியென்பால் ௧௭௨

யானளிக்க நீர்வேட் டளித்திடவும் வேண்டுமென
மேனயந்து கேட்ப வியந்தருளித்—தானகல ௧௭௩

தந்தைதனைத் தானினைக்கச் சார்ந்தவரைத் தாள்பணிந்து
விந்தைதக வொன்று விதித்திடெனச்—சந்தமுற ௧௭௪

வாய்ந்தயிர மாநகரில் வைகிச் சுராசுரர்கள்
ஆய்ந்துபுடை சூழ வரசியற்றி—யேய்ந்திடுகால் ௧௭௫

வேதாதருந்தேவ வல்லியெனு மெல்லியலை
ஆதரவாய்வேட்டா யிரமகவைத்—தீதகல ௧௭௬

மேலானபாக்கியத்தை மேவியவன் வாழ்ந்திடுங்கால்
மாலானுமைகொள் மனத்தருக்கி—றுமேல ௧௭௭

உலகத்தை யீச னெறிக்கெவம்மை போற்றப்
புலனுற் றளித்துமைமீ யோங்கு—நலமாந் ௧௭௮

தவஞ்செய் மரீசிமுனி தன்மகளா கென்னைப்
புவியமுனை மாநதியிற் பூத்த—நலமனைமேல் ௧௭௯

சங்கவாடி வாரித் தவமுனிவன் சார்ந்தெடுப்ப
கங்கையுரு வல்லவையென் றுமமொழி—தங்கியே ௧௮௦

அன்பாற் றவஞ்செய்ய வார்ந்தமயில் வாகனமேல்
முன்பாக் கணேசனென முன்னின்றே—இன்பமுற ௩.அ௧

மாமணஞ்செய் தாரங்கு வந்துதிருமாலளித்த
மாமகளா மோதை பிரமோதை—காமர் ௩.அ௨

சுமதை சவுந்தரியே சுத்தமனோ ரம்மை
சமமங்கலைகே சினிகாந்தை—அமரும் ௩.அ௩

சுமத்திமையே நந்தினியே சூழ்காமை காமதை
அமைத்தபெண்கள் பன்னிருவ ரன்பால்—தமைத்தொழலும் ()

அங்கீ கரித்தவரை யாதரித்துச் செந்திருமால்
தங்கித் தசவவதா ரஞ்செய்யப்—புங்கவிஸ்வ ௩.அ௫

ரூபம் பெறத்தனதா முண்மைஞா னம்பெறவும்
தாபமறக் காக்குஞ் சதுராளித்தே—யூபமிகும் ௩.அ௬

நாமன் மரீசிமுனி மற்றுமுள தேவர்க்கும்
காமர்வர மீந்து கருணைசெய்து—சேம ௩.அ௭

மணித்திப மென்னுந்தன் வானுலக மெய்தி
அணைத்தவெழில் வல்லவைப்பு மன்பால்—மனைத்தபெண்கள் ()

சூழ்ந்து பணிசெய்யச் சுகோதநியாய்த் தானிறைந்து
ஏழ்புவியி லாங்காங் கினிதிருந்து—வாழும் ௩.அ௯

பிரமாதி தேவர் பெருமுனிவர் சித்தர்
நராதலமாள் மன்னர்மற்றோர் தாமும்—பராவி ௩.௯௦

உபாசனைசெய் தின்று முவந்த வரம்பெற்று
சுபாசுபமாம்வாசனைபோய்த் தோன்றி—அபாயமற ௩.௯௧

## ௧௪ விநாயகர் திருப்புகழ்போற்றிக்கலிவெண்பா.

முத்தி விரும்பினர்க்கு முத்தி கொடுத்தினிது
சித்தி விரும்பினர்கள் சித்திபெற—வித்தகர்தாம் ௧௯௨

பற்பல்மதத் தோர்கள்செயும் பாவனைபோற் பேறுதவி
அற்புதமா முத்தொழிற்கு மாதிப்பாய்—நித்யமுத்த ௧௯௩

ஆதியந்த மில்லாத வானந்த மூர்த்தியாய்
ஓதுவரு மோங்காரத் துட்பொருளாய்—நீதி ௧௯௪

நிறைபரமாய் நின்ற விநாயகர்மேன் சாதை
மறைபுகன்று முற்று மகிமை—முறைபுணர்ந்த ௧௯௫

சங்கரனைப் போற்றிச் சதுமுகனுர் தாம்வினவ
அங்கவற்றி லோர்பாக மாராய்ந்து—துங்க ௧௯௬

அவதாரம் பன்னிரண்டு மற்புதமா லீலை
தவர்களுடா சித்தகைத் தாமும்—பவமகல ௧௯௭

ஓதியவாறே வேதா வற்றுணர்ந்து வியாதனுக்குப்
போதனைசெய் தாங்கவனும் புத்திமிகும்—மாதவரும் ௧௯௮

அன்பன் பிருகுமுனிக் காதரவாற் கூறவவர்
மன்சோம காந்தனெனு மன்னனுக்குப்—பன்னவவன் ௧௯௯

வெவ்வினைக டீர்ந்து விநாயகர்சா லோகத்தில்
எவ்வமறத் தேவிமக னென்றகிலா—ஒவ்வவைவடம் ௨௦௦

இதில் சுகமடைந்தா ரென்றபுரா ணங்கேட்டோர்
கூறினர்க்கு முத்திசித்திக் கும். ௨௦௧

திருச்சிற்றம்பலம்.

சம்பூரணம்.

சிவமயம்.

—*—

# காசித்தலத்தில் சத்தவாவரணத்தில் எழுந்தருளியிருக்கின்ற ஐம்பத்தாறுவிநாயக மூர்த்தங்களின் திருநாமங்கள்.

## முதலாவரணத்தில்.

துண்டிவிநாயகர், துர்க்கைவிநாயகர், அர்க்கவிநாயகர், பிரசன்னவிநாயகர், வீமவிநாயகர், சந்திவிநாயகர். ஆ—எ.

## இரண்டாமாவரணத்தில்.

சித்ருபவிநாயகர், லம்போதரவிநாயகர், கூடதந்தவிநாயகர், சலாடவிநாயகர், குலப்பிரிடவிநாயகர், சதுர்த்திவிநாயகர், பஞ்சபிவிநாயகர், முண்டகவிநாயகர், சமுகிகவிநாயகர், விடங்கவிநாயகர், நிஜவிநாயகர், இராஜபுத்திரவிநாயகர், பிரணவவிநாயகர், உபநாபவிநாயகர். ஆ—கஅ.

## மூன்றாமாவரணத்தில்.

வக்ரதுண்டவிநாயகர், ஏகதந்தவிநாயகர், திரிமுகவிநாயகர், பஞ்சமுகவிநாயகர், ஏரம்பவிநாயகர், விக்கினராஜவிநாயகர், வரதவிநாயகர், மோதகப்பிரியவிநாயகர். ஆ—அ.

## நான்காமாவரணத்தில்.

ஏகோபயப்பிரதவிநாயகர், சிங்கமுகவிநாயகர், கூர்நிதாக்ஷவிநாயகர், க்ஷிப்பிரப்பிரசாதவிநாயகர், சிந்தாமணிவிநாயகர், தந்தவக்ரவிநாயகர், அபிசண்டிவிநாயகர், ஊர்த்துவாண்டமுண்டவிநாயகர், ஆ—அ.

### ஐந்தாமாவரணத்தில்.

மணிகர்ணவிநாயகர், ஆசாசிருட்டிவிநாயகர், கஜகர்ன்னவிநாயகர், கண்டாவிநாயகர், சுமங்களவிநாயகர், மந்திரவிநாயகர். ஆ—௬.

### ஆறுமாவரணத்தில்.

மோதகவிநாயகர், சுமுகவிநாயகர், துன்முகவிநாயகர், கணபதிவிநாயகர், அபரவிநாயகர், ஆக்கினைவிநாயகர், துவாரவிநாயகர், அவிமுத்திவிநாயகர். ஆ—௮.

### ஏழாமாவரணத்தில்.

ஆமோதவிநாயகர், பாகீரதவிநாயகர், அரிச்சந்த்ரவிநாயகர், கபர்த்திவிநாயகர், பெந்துவிநாயகர், சனகவிநாயகர். ஆ—௬.

இத்திருநாமங்களை எழுதினவர்களும், உச்சரித்தவர்களும், கூறக்கேட்டவர்களும், விநாயகமூர்த்தி மகத்துவங்களைக்கேட்டுணர்ந்த மேலானபலனைப் பெறுவார்கள், தீவினையனைத்துநீங்கி மேலானசுகத்தையடைவார்கள்.

*

## அவதாரலீலைகளில் இன்னுங்கூறப்பட்ட சிறப்புநாமங்கள்.

சித்திபுத்திவிநாயகர்
மயூரேசவிநாயகர்
தூமகேதுவிநாயகர்
கணபதிவிநாயகர்
இலக்கவிநாயகர்
சர்வசித்திவிநாயகர்
மந்தாரவிநாயகர்
காலானலப்பிரசவிநாயகர்
வல்லபைவிநாயகர்
பாலசந்த்ரவிநாயகர்
கணேசவிநாயகர்
மகோற்கடவிநாயகர்
சித்திவிநாயகர்
வன்னிவிநாயகர்
விண்டுவிநாயகர்

## சகஸ்த்ரநாம சமானநாமங்கள்.

கணபதி
ஏரம்பன்
மோகன்
தரணிதரன்
கலாதரன்
கசியபந்தன்
மஹாகணபதி
க்ஷிப்ரப்பிரசாதன்
ஆசாரபூரகன்
வரதன்
ஜயன்
அமுதமந்திரன்
இலக்ககணபதி
வாச்சிகதன்
பீஜவிநாயகன்
மங்கலவிநாயகன்
உடுண்டிவிநாயகன்
பிரியகணபதி
சித்திவிநாயகன்
சிந்தாமணிவிநாயகன்
மகோற்கடவிநாயகன்

ஆ உக.

---

## துவாதசநாமார்ச்சனை.

ஓம் சுமுகாயநமஃ
ஓம் ஏகதந்தாயநமஃ
ஓம் கபிலாயநமஃ
ஓம் கஜகர்ணகாயநமஃ
ஓம் லம்போதராயநமஃ
ஓம் விகடாயநமஃ
ஓம் விக்னராஜாயநமஃ
ஓம் கணாதிபாயநமஃ
ஓம் தூமகேதவேநமஃ
ஓம் கணாத்யக்ஷாயநமஃ
ஓம் பாலசந்த்ராயநமஃ
ஓம் கஜானனாயநமஃ

ஆ திருநாமம்-கஉ.

---

## விநாயகர்பூஜை.

ஓம் கணேசாயநமஃ
ஓம் விக்கினராஜாயநமஃ
ஓம் ஆகுவாஹனாயநமஃ
ஓம் ஏரம்பாயநமஃ
பாதௌபூஜையாமி
ஜானுநீபூஜையாமி
ஊரும்பூஜையாமி
கடிம்பூஜையாமி

ஓம் தேவதேவாயநம: நாபிம்பூஜையாமி
ஓம் லம்போதராயநம: உதரம்பூஜையாமி
ஓம் கணநாயகாயநம: ஹ்ர்தயம்பூஜையாமி
ஓம் ஸ்தூலகண்டாயநம: கண்டம்பூஜையாமி
ஓம் ஸ்கந்தாக்ரஜாயநம: ஸ்கந்தௌபூஜையாமி
ஓம் சதுர்ப்புஜாயநம: புஜௌபூஜையாமி
ஓம் பாசஹஸ்தாயநம: ஹஸ்தான்பூஜையாமி
ஓம் கஜவக்த்ராயநம: வக்த்ரம்பூஜையாமி
ஓம் விக்னஹந்த்ரேயநம: நேத்ரேபூஜையாமி
ஓம் சூர்ப்பகர்ணாயநம: கர்ணௌபூஜையாமி
ஓம் ஏகதந்தாயநம: தந்தம்பூஜையாமி
ஓம் குமாரகுருவேநம: சிரம்பூஜையாமி
ஓம் சர்வேஸ்வராயநம: சர்வாங்காநிபூஜையாமி

என்று பாதம், முழந்தாள், தொடை, நிதம்பம், நாபி, வயிறு இர்தயம், கண்டம், கழுத்தடி, தோள், உள்ளங்கை, நாசி, கண், காது, தந்தம், சிரம், சர்வாங்கம் என்னும் கசு - இடங்களில் அங்கபூஜைசெய்க.

---

## அறுகு-வன்னி-மந்தாரை-முதலிய புஷ்பார்ச்சனை.

ஓம் சுமுகாயநம: சாதிபுஷ்பம்சமர்ப்பயாமி
ஓம் ஏகதந்தாயநம: சாவந்திகாபுஷ்பம் சமர்ப்பயாமி
ஓம் கபிலாயநம: மல்லிகாபுஷ்பம்சமர்ப்பயாமி
ஓம் கஜகர்ணாயநம: சம்பகபுஷ்பம்சமர்ப்பயாமி
ஓம் லம்போதராயநம: கல்லாரபுஷ்பம்சமர்ப்பயாமி
ஓம் விகடாயநம: கேதகிபுஷ்பம்சமர்ப்பயாமி
ஓம் விக்னநாசினேநம: வகுளபுஷ்பம்சமர்ப்பயாமி
ஓம் விநாயகாயநம: சதபத்ரபுஷ்பம்சமர்ப்பயாமி
ஓம் தூமகேதவேநம: புன்னாகபுஷ்பம்சமர்ப்பயாமி

| | |
|---|---|
| ஓம் கஜத்யக்ஷாயநம: | தத்தூரபுஷ்பம்சமர்ப்பயாமி |
| ஓம் பாலசந்த்ராயநம: | மாலதிபுஷ்பம்சமர்ப்பயாமி |
| ஓம் பத்னிஹீநயநம: | விஷ்ணுக்கிராந்தபுஷ்பம்சமர்ப்பயாமி |
| ஓம் உமாபுத்ராயநம: | கிரிகர்ணிகாபுஷ்பம்சமர்ப்பயாமி |
| ஓம் கஜானநாயநம: | நாகபுஷ்பம்சமர்ப்பயாமி |
| ஓம் ஈசபுத்ராயநம: | மந்தாரபுஷ்பம்சர்ப்பயாமி |
| ஓம் சர்வசித்திப்பிரதாயகாயநம: | கோவிதாரபுஷ்பம்சமர்ப்பயாமி |
| ஓம் மூஷிகவாஹனாயநம: | துருமோற்பலபுஷ்பம்சமர்ப்பயாமி |
| ஓம் குமாரகுரவேநம: | ரக்தபுஷ்பம்சமர்ப்பயாமி |
| ஓம் தீர்க்கதுண்டாயநம: | அர்க்கபுஷ்பம்சமர்ப்பயாமி |
| ஓம் இபவக்த்ராயநம: | முனிபுஷ்பம்சமர்ப்பயாமி |
| ஓம் ஸங்கடநாசினேநம: | ஏகவிம்சதிபுஷ்பம்சமர்ப்பயாமி. |

## பூஜைக்குரிய பத்திரங்கள்.

| | | |
|---|---|---|
| சிறுசண்பகம் | நாயுருவி | விஷ்ணுக்கிராந்தி |
| கரசராங்கணி | திருவாத்தி | மாதுளை |
| வில்வம் | வன்னி | மந்தாரை |
| அருகு | அலரி | மருவு |
| இந்தை | மூங்கில் | சாதிமல்லி |
| ஊமத்தை | வெள்ளெருக்கு | வெண்மொச்சி |
| துளசி | மருதம் | ஆ உ௧-பத்திரம். |

## பூஜைக்குரிய புஷ்பங்கள்.

| | | |
|---|---|---|
| சிறுசண்பகம் | தாமரை | மந்தாரை |
| சாமந்தி | புன்னை | குரா |
| மல்லிகை | ஊமத்தை | கோங்கு |
| சம்பங்கி | முல்லை | செம்பரத்தம் |
| செங்குவளை | விஷ்ணுக்கிராந்தி | வெள்ளெருக்கு |
| தாழை | வெள்ளைக்காகணம் | அகத்தி |
| மகிழம் | நாகை | ஆ உ௦-புஷ்பம். |

முற்றிற்று.

சிவமயம்.

# மயிலாசல முருகேசர்பதிகம்.

## காப்பு.

மணிநாணுஞ்செவ்வேன்மயிலமுருகேசற்
கணிநாணுஞ்சொற்றாரணியப்—பணிசூடும்
ஈசன்றரித்தபிறையேற்போமெனமுத்துக்
காசுதவுகோட்டிபமேகாப்பு.

## நூல்.

பொன்னினிற்பதித்தநவமணிக்கலன்கள்பூண்டுசெம்பொற்பட்டாமணிந்து, மின்னெனவிளங்குந்தெய்வயானையையுமேன்மையார்வள்ளியும்மனையும், தன்னிருமருங்குமமர்ந்திடமயின்மேற்சண்முகாகாட்சிதந்தருள்வாய், அன்னையம்பிகைநீறணிந்துமுன்னுதவும்அயிலனேமயிலநாயகனே. க

சேணிடைவலாரியாதியர்க்கபயஞ் செய்தவர்பகைகெட்வழித்து,மாணுயர்தமிழ்ச்சொற்கீரனுக்கருளிமற்றவன்புனைபடையாறும், பூணதாமென்னப்பொலிவுறப்புனைந்துபுன்மையேன்வினைகடீர்த்தருளும், யாணர்நற்சோதியென்னவேயொளிரும்அயிலனேமயிலநாயகனே. ௨

உலகெலாமிருகைமுடிமிசைகூப்பியொருமுருகாவெனயோதிபலமலவுட்லிற்பிறந்துழலாதுபாதுகாத்தருளெனப்போற்றி
நிலைவளர்ரியசடாக்ஷரப்பொருளைநினைவுறச்செபித்தலர்கொண்டு
அலர்புனைபதத்திலணிதரவருள்செய் அயிலனேமயிலநாயகனே.

உருகுறேன்மனங்கண்ணீர்சொரியேனின் றொருசிறுநாவி
ஞற்போற்றேன், இருவினைக்காடுமும்மலச்சேறுமெரிந்தொழிந்
திடத்தவம்புரியேன், பருவமிலெற்குன்பதப்பொடிதரிலெம்பரா
பரன்கண்டுளமகிழ, அருளினன்மெய்மையன்பளுகிடுவேன் அயி
லனேமயிலநாயகனே. ௪

உளமலர்கமலத்தவிசிடைநினதுவொப்பிகல்றபுதவுருவை
தளர்வறவமைத்துவாய்மைநீராட்டிசாந்தமாதூசணியணிந்து
அளவிலாநினதுபுகழ்மலர்மாலையாசையிற்புனைந்தினிதணிந்து
அளியினலன்பையருத்துதலென்றோ அயிலனேமயிலநாயகனே

எண்ணுதற்கரியபுகழணிமேனி யெழிறனையுளாத்திடற்கெ
ளிதோ, கண்ணினுக்கமுதமூட்டுமேயெனதுகவலைதீர்ந்தற்புதம
டையத், தண்ணளியுருவாத்தங்கியமணியேதருமன்வந்தெனைய
ழைத்திடும்போ, தண்ணளின்பதமேயன்றிவேறுண்டோ அயி
லனேமயிலநாயகனே. ௬

வார்தருசுருட்பூங்கமலமேநிகராம் வதனமும்வளர்தனச்
செப்பும், பார்வையிற்றோன்றுவிடையுமோரரவப் படவரவல்கு
லுங்கண்டு, சார்தருபிறவித்துயர்க்கட்படாது காட்டினையெனு
றுநீதருவாய், ஆர்கலியுளோர்தங்கடிபணிந்தேத்தும் அயிலனேமயி
லநாயகனே. ௭

பூதலமதனின்மிடிபிணியுற்றுப்பொய்யினைமெய்யெனக்கூறி
ஓதுதற்கரியதுயருளோர்திருதாளொண்புகழோதிலரென்றோ
ஈதரற்கருளியன்பொடும்வினவச் சிறந்தபஞ்சாக்கரப்பொருளின்
ஆதியாம்பயனையரற்குரைத்தருளும் அயிலனேமயிலநாயகனே.

என்றனைப்போலுஞானமில்வேட் டனெதிர்ப்படுகொலிமால
ணத்தில், மன்னிவந்தவனைநுங்கைதயெம்பெருமான்மலரடிக்கண்

பனுக்கிலையோ, பன்னுதற்கரியவென்மயலகற்றில்பவ்மகன்று ன்னடிசேரும், அன்னவர்போற்றற்கெஞ்சியபுகழாம்அயிலனே மயிலநாயகனே. கூ

பிறவிவார்கடலைக்கடந்துனதிருதாட்பெரும்புணைபற்றியா னந்தத், துறைபெறுமுத்திவாரிசார்ந்துநோந்தியான்சுகிப்பது மென்னுள், மறைநெறியுணர்ந்தமாதவர்போற்ற வானவர்இனந் தொழுதேத்த, அறிவினின்றினிதுள்ளானந்தமுதவும்அயிலனே மயிலநாயகனே. க0

மயிலாசலமுருகேசர்பதிக முற்றிற்று.

---

உ

சிவமயம்.

குணமங்கலம்

# முருகேசர் திருப்பதிகம்.

---

காப்பு.

குணமங்கலம்பதியாக்கொள்ளுங்கணேசர்
குணமங்கலவருளைக்கூடி — துணைவர்
முருகர்திருப்புகழைமுன்பதிகம்பாடித்
திருவருளாற்செல்வமடைவாம்.

நூல்.

உலகமெல்லாந்தொழுதேத்தவும்பர்குறைதீர்ந்துய்ந்திடவும்
திலகநுதலாற்சிவனளித்தசெவ்வியார்ந்தசண்முகனே
இலகுமண்டமாயிரத்தெட்டிறையாயிடர்செய்சூரபத்மன்
குலவுமயில்சேவற்கொடியாங்குணமங்கலம்வாழ்பெருமானே க

தேவர்சிறையைமீட்டருளச்செவ்வேலணிந்துதுணைவருடன்
காவல்சேர்ந்தமகேந்திரத்திற்கடியவராசாள்சூரபத்மன்
மாவல்லபஞ்சேர்தாருகனும்வயங்குபானுகோபன்முதல்
ஓவிலவுணர்தமைக்கடிந்திங்குயர்மங்கலம்வாழ்பெருமானே. ௨

தேவேந்திரன்செய்மாதவத்தாற்றிகழ்ந்ததெய்வயானைதனை
மூவர்முதலாமுப்பத்துமுக்கோடியராந்தேவர்தொழ
ஆவலோடுமணம்புரிந்தங்கரியதணிகைப்பதியமர்ந்து
சேவற்கொடிசேர்மயின்மீதுதிகழ்மங்கலம்வாழ்பெருமானே. ௩

முனிபுங்கவர்செய்மாதவத்தான்முன்னமானின்வயிற்றுதித்தங்
கினியவேட்ராஜனிடத்திருந்தவள்ளியம்மனையும்
கனியுமருளாற்காந்தருவக்கலியாணஞ்செய்துளமகிழ்ந்தாய்
பனிமென்மலர்தூயுலகேத்திப்பணிமங்கலம்வாழ்பெருமானே. ௪

பொதியமலையிலகத்தியனார்புரிந்ததவத்தான்மனதிரங்கி
விதியின்மெஞ்ஞானந்தன்னைவிளங்கவுபதேசித்தருளி
துதிசெய்யருணகிரிநாதர்தொடருமனந்தந்தொண்டருக்கும்
கதிசேர்முத்திக்கரைகாட்டுங்கனமங்கலம்வாழ்பெருமானே. ௫

சங்கத்தலைவனாற்கீரன்றனக்கங்குண்டாமிடர்தீரத்
துங்கமுருகாற்றுப்படையைச்சொல்லித்துதிக்கவருள்சுரந்து
பொங்குமவுணன்சிறைநீக்கிப்பொருவில்கைலாயஞ்சேர்த்தே
அங்ஙன்முத்திகொடுத்தருளுமருமங்கலம்வாழ்பெருமானே. ௬

உலப்பிலருள்சேருன்னடிகட்குரியபுகழைப்போற்றிசெய்வார்
நிலத்திற்பெரியவரம்பெறுதல்திகமோநீயேமுன்னின்றால்
பலத்திற்பெரியதவம்புரிந்துபழுதின்முத்திசேர்வார்கள்
நலத்திற்பெரியவளமல்குநன்மங்கலம்வாழ்பெருமானே.

வினையால்விளைந்தபலபிணியும்மிக்கவிடஞ்சேர்கொடும்பிணியும்
நினையார்வாதிபௌதிகத்தால்நேர்ந்தபிணியுந்தெய்வத்தால், இனை
யவருத்தும்பிணியனைத்துமிகலும்வறுமைப்பிணிதனையும், தனை
யாதரித்தோர்க்கொழித்தருளுந்தவமங்கலம்வாழ்பெருமானே. ௮

குடும்பந்தன்னில்வருப்பகையுங்கொடியவஞ்சர்செயும்பகையும்
இடுமாவரசர்மேன்மேலுமிறையைச்சுமத்தும்பெரும்பகையும்
படுமாவனலால்வெள்ளத்தாற்படரும்பகையுங்கள்ளர்களால்
அடுமாபகையுநீக்கியருளமர்மங்கலம்வாழ்பெருமானே. ௯

குணமார்காராமணிநகரைக்கூறுங்குணமங்கலமென்ன
இணையார்பெயருமவழங்கிவரவினிதாய்த்தேவாசனத்திருந்து
துணைமாமுகவர்கைலாயர்சூழவிருந்திங்கருள்செய்யும்
பணைமாமயிலூர்பெருமானேபணிவேலுளம்வாழ்பெருமானே. ௧௦

முற்றிற்று.

உ

சிவமயம்.

குணமங்கலங் காராமணிநகர்

# முருகேசர் தியானதோத்திரபஞ்சகம்.

சீரார்கருணைபொழியாறுதிருமாமுகமுஞ்செழுங்கரங்கள்
ஈராறுடனேமயின்மீதிலிளஞ்செங்கதிர்போல்வீற்றிருந்து
நேராய்விளங்கியடியர்தொழுநினைத்தவரங்களளித்தருளும்
ஏரார்காராமணிநகரிலிலங்குமுருகப்பெருமானே.

சுடர்மாமணிசேர்திருமுடியுந்துலங்குவயிரத்தோளணியும்
படர்மார்பிலங்குகதிர்மணிசெய்பதக்கம்பருமாமணியாரம்

அட்ர்செஞ்சதங்கைத்திருத்தாளுமரியபீதாம்பரவுடையும்
தடமார்காராமணிநகரிற்றழைழுமுருகப்பெருமானே. உ

பதுமத்திருமாவதன்மொளிர்பவளக்கொடியும்பசுங்கொடியும்
மதுவைப்பொழியுமலர்மாலைமணியாபரணமுழுதணிந்து
மதியைக்குளிரச்செயுங்கலைகள்வயங்கவிரண்டுமருங்கமர்ந்து
புதுமைக்காராமணிநகரிற்புகழார்முருகப்பெருமானே. ௩

சேவற்கொடியுங்கதிர்வேலுஞ்சிறந்துவயங்கவிருபுறமும்
காவற்பூதப்படையுடனேகைவேலணிந்தநவவீரர்
தேவர்முனிவரிருடியர்கள்செறிந்துபோற்றமயின்மீது
மாவண்காராமணிநகரில்வயங்குமுருகப்பெருமானே. ௪

அன்பருள்ளக்கமலத்திலகலாதமர்ந்துசதாகாலம்
இன்பக்கருணைபொழியமுதமிலங்காணந்தப்பெருங்கடலே
முன்பெற்றுளமாதவத்தாலேமுறையேபோற்றவருள்செய்வாய்
மன்பொற்காராமணிநகரில்வயங்குமுருகப்பெருமானே. ரு

முற்றிற்று.

---

உ
சிவமயம்.

வல்லத்திருப்பதி

# சடையீசர் தேவாரப்பதிகம்.

---

விநாயகர்துதி.

சீர்மருவுவல்லத்திருப்பதிவாழைங்கரனார்
ஏர்மருவுபொற்றுளிறைஞ்சியே—நார்மருவும்
நற்றேவாரப்பதிகநாம்போற்றிசெய்தருளைப்
பெற்றுலகில்வாழ்வாம்பெரிது.

கார்மாரிபொழிவளமுங்கால்வாயினெடுவளமும்
ஏருருசிலவளமுமிணையில்பலபயிர்வளமும்
ஊர்வளமுங்குடிவளமுமுலவாதபொருள்வளமும்
சார்வல்லத்திருப்பதிவாழ்சடையீசரடிபோற்றி. ௧

செந்நெலார்வளமல்குசெழும்பழனத்துறைறவாய்ந்து
கன்னல்கழுகெழிலோங்கக்கமலமலர்த்தடஞ்சூழ
மன்னியவானெடிதோங்குமணித்திருக்கோபுரத்தமர்ந்த
தன்னிடமார்ஜெயஞும்பாள்சடையீசரடிபோற்றி ௨

முத்துமணியலைவாரிமோதுகரையேரிகளும்
நத்துபணிலங்கள்செறிதடம்புடைசூழ்சோலைகளும்
நத்திவரும்பலபரவைநாதமுயர்கீதமொடு
சத்திவல்லப்பதியமருஞ்சடையீசரடிபோற்றி ௩

தும்புருநாரதர்யாழிற்றொடுத்தரியநெடும்புகழை
உம்பர்மனங்களிதுளங்கவோயாதின்னிசைபாட
அம்பரத்திலலர்மாரியகலாதுமணம்வீச
இம்பர்வல்லப்பதியமருமெழிற்சடையாடிபோற்றி ௪

பத்திமிகுந்தொண்டர்குழாம்பலபாடற்றுதிசெய்ய
சித்தமலரடிவைத்துச்செகமுழுதும்பணிந்தேத்த
வைத்தபெருங்கருணையினல்வாழ்வித்துச்சகமளிக்கும்
சத்திஜெயஞும்பிகைபாற்சடையீசரடிபோற்றி ௫

கஜாசுரனைத்தடிந்தருளுங்கணபதியாரொருபாலும்
அஜாடலுகந்தமரர்சிறையகற்றியவேளொருபாலும்
நிஜானந்தப்பெருமுனிவர்நிமலசிவகணஞ்சூழத்
துவிஜருறைவல்லத்தமருஞ்சூழ்சடையாரடிபோற்றி ௬

மலரயனுமன்னமதாய்வான்பறந்துமுடிதேடி
நிலமேவியேனமதாய்நெடுமாலுமடிதேடி
பலகாலுமுழன்றிளைத்துப்பரிந்துதொழப்பேரருளால்
நலமேல்வல்லத்தமர்ந்தசடையீசரடிபோற்றி. ௭

மழவிடைமேலெழுந்தருளிவான்பணியவுலகேத்த
இழைமருங்குற்ஜெயனும்பாளிடத்தமருந்திருக்கோலம்
தொழுவரியதவஞ்செய்தோஞ்சுகமடையவினிதருள்வார்
செழியதிருவல்லத்திற்றிருச்சடையரடிபோற்றி. ௮

திங்களணிமணிமுடியிற்செறிகங்கையலைவீச
பொங்குமழுமான்கரத்திற்பொலிந்திருபாலசைந்தாட
தங்குமிருகரமபயவரதமொடுதாண்டவஞ்செய்
எங்கள்வல்லத்திருப்பதிவாழுழிற்சடையரடிபோற்றி. ௯

தென்பாற்றிசைநோக்கித்தில்லைச்சிற்றம்பலத்தில்
அன்பாற்றெருமடியனைந்தொழிலின்றிறங்காண
இன்பாடல்செய்தங்கிருஞ்சனகாதியர்க்கருளி
முன்பார்வல்லத்தமருமுதிர்சடையருள்போற்றி. ௧௰

கடவுள்துணை.

# பலபாடற்றிரட்டு.

## விநாயகர் துதி.

பூத்தமலர்வாவிபொழில்சூழ்தரும்புதுவை
காத்தமலர்வாகைக்கரமைந்தான்—ஏத்துமியற்
செய்யுள்புனையுஞ்சிறப்பென்றுமெற்களிக்கும்
துய்யமலர்ப்பாதந்துணை. ௧

## வேதபுரீசர் துதி.

முப்புரத்தையன்றுமுனிவாலெரித்துப்புகழ்
செப்புதிரிபுரையைச்சேர்பாகன்—ஒப்பரிய
வேதபுரியீசன்விளங்குதுவைக்கிறைவன்
பாதமலர்போற்றிப்பணி. ௨

## திரிபுரசுந்தரி துதி.

போற்றுமடியவர்செய்பொய்யிருளின்மூன்றுதவி
கூற்றுதைத்தோர்பாகமமர்கோமாதே—ஆற்றலுள
நன்மொழியாற்செய்யுணவிலவரந்தந்தருளி
மன்னுதிரிபுரையுள்வாழ். ௩

## முருகர் துதி.

விண்ணவர்க்கன்றுற்றவிழுமந்தீர்த்தோங்குகுறப்
பெண்ணவர்க்குமாலைதரும்பெற்றியனே—வண்ணம்
இயைபுதுவைக்கந்தாவிணையினின்சீர்போற்றத்
தலையுடையாய்பாடவரந்தா, ௪

### வரதராஜர் துதி.

கஞ்சமல ருந்திதிருக் கண்ணு மணிவண்ணு
எஞ்சு மதிசூடிக் கினியானே—மஞ்சுதவழ்
மாடங்கள் சூழ்புதுவை மன்வரத ராஜனே
நாடொழுவேன் பாடவரந் தா. ௫

### இலக்குமி துதி.

கொற்றபங்க யத்திலுறை கோமாதே நின்கருணை
பெற்றவர்கள் பெற்ருர் பெருஞ்செல்வம்—மற்றுமெனை
நின்னருட்கா ளாக்கி நிறைந்தநிதி யெற்கருள்வாய்
மன்னறங்கள் செய்வான் மகிழ்ந்து. ௬

### சரஸ்வதி துதி.

மதிபோ லொளிரு மலர்வனசத் துன்னில்
பதிநா வெனவுறையும் பாவாய்—நிதியேயென்
உள்ளக் கமலத்தி லோங்கென் றெருநாளில்
கள்ளமில்சொற் பாவாக் கனிந்து. ௭

### வித்தியாகுரு துதி.

கற்கத் தகுவனவே கற்பித் தருள்குருவாய்
நிற்கத் தகுநெறியே நிற்பித்தோன்—நெற்கில்
உறையு மொருமுனிவ னொப்புசுப்ப ராயன்
நிறையருளே நெஞ்சே நினை. ௮

### விநாயகர் துதி

## சமஸ்கிர்தசுலோக மொழிபெயர்ப்பு.

திருமகளுறைக்க மலிக்குமேன்மேலுந் திவ்வியதான் மறைக் கொழுந்தாகி, மருமலிகமலத் தெழிலெலாங்கவர்ந்து வடி வொளி புகளமா வயங்கி, ஒருபெருமேரு சிகரும்பாம்ப வரிசைய ... யாது

ரு வகையான். அருமிருகனைம் விக்கினமகேசனைச் சூழ்ந்திசேவை
ச்சிரா யுதமே. ௯

சால்வழிகுறி.

பிரமவொளியார் வான்முகமும் பிறங்குகரங்க ளீரைந்தும்
பிளைமான்விழிக ளிருநான்கும் பெற்றமணியின் முத்தொளியும்
தாமதாகப் புவனமெலாந் தந்தாண்ட கமண்டலமுந்
தவளமேனி மூன்றாலுஞ் சடைமாமுடிசேர் மணிக்குழையும்
வாமதாகச் சிவத்திருவடியங்கிலைபு மணிப்பூணும்
வாம்பொற்றிருகாரன்னமிசை மயங்காமிசைத்தோட்புனடிகந்
திரம்தாமெய்ச் சுவைநடமைச் செல்வமெய்க்குந் தருமொளியாய்த்
திகழுங்கலைமா திலைமிசைத் தேத்திற்றியானுஞ் செய்குவோம்.

வேறு.

வருடகாலத் தருதவொருன் மத்தைமெட்டுத் துங்கனிறும்
இருளாயிவலி நுதவொரு விலைக்கத்தொற்கைப் பசற்பொருதும்
அருமெய்யருந்தும்வயோநிதத்தொரும்பொருளிமெய்வனைத்தும்
இருமையுனர்க்கு தேதுமொரு விம்மைவீட்ட மநுமைமகளே. ௧௧

வேறு.

ஈவனவிசித்தும் வணக்கியேகவர்க்கு சேருமதியிருக்கும் கய
வர், காவருமேற்ற மருத்தொழிம்பிறந்து கலீல்டமோனசேர்ட்டமோ
வழியேயம், தீவெனவிரந்து குழைந்தொலியனர் சம்பிதுகளை
மொன் றின்றி, ஒவைறப்பெற்ற திறந்துனிவைகளி ஓவைம்மேலை
முனைப்பித்தன் னிவைக்கே. ௧௨

வேறு.

நடக்கற்பாலது நடக்குமெம் முயற்சியுமின்றி
நடக்கற்பாலல நெம்முறைமுயலினு நடவா

நட்கற்பாலதா மான்செயலொன் றுமின் றாலம்
நட்சற்பாலது நடந்ததென் றுணர்ந்தவர் நவியார். கரு

வேறு.

வழிவரும் விடமீயார்சொல் வன்மைப்புத் தகம்யாதிற்க
தொழில்வயித் தியமேன்மாமி துணைவிழி தருகவன்றி
முழுதுணர் சோதியுறேில் முன்னமூர் சென்றகாந்தன்
கழிநெடுந் தூரநீங்கிக் காண்பதென் றுணர்ந்துசென்றாள். கசு

வெண்பா.

நல்லோர் நமக்கியற்று நன்மைக்கு யாதுமொன்
மெல்லோர் நலமிலமென் றெண்ணற்க—அல்லோர்
நமக்கியற்று தீமைக்கு நாம்புரிந்த தேது
தமக்குரிய வன்குணமே தான். கரு

வேறு.

வெறுவிதா யிருந்துவென் னுமன்ன மேவிய வருளான்மேன்மை
பெறுங்கவி பாடுவித்துப் பெய்கழற் றொண்டனுக்கி
உறுவினை நீக்கியாண்ட வுத்தம கணேசமூர்த்தி
வறுமைநோய் வாராதெற்கு வழங்குக செல்வமன்றே. கசு

வெண்பா.

அடுத்தவனைக் காக்கு மறமுறைந்தா யெம்மை
விடுத்திடவு மெய்தேற விளம்பாய்—தொடுத்தகவி
பாடியவடைந் தேனுக்குப் பாக்கியங்க டந்தருள்வாய்
தேடுகின்றேன் செந்திருத் தேவி. கஎ

வேறு.

ஆக்கவல்லா யாக்கினைை யளிக்கவல்லா யடியரிடர்
போக்கவல்லாய் நின்புகழைப் புகன்றுபோற்றி செய்வேனை

நீக்கவல்லா யெனில்என்னை நினைந்தார்தொண்டு செய்வார்கள்
மாக்களுணர்ந்து மடியவிடர் மாற்றவல்ல பெருமானே. கஅ

வினையின்பயனே யுயிர்க்குறுமென் றோதவிதியோர் புறந்தள்ளி, தனைவந்தடுத்தோர் வேண்டியவா தாவல்லோயிற் போற்றுமெனை, இனையுமிடரிற் கைவிட்டா லியாவர்நினக்குத் தொண்டாவார், நினைமார்க்கண்டன் றுயர்நீக்க நிறையாயருள்செய் பெருமானே. க௯

இடரிலுழைப்போர் தமைக்கண்டா லென்றுமுளமும் பதைபதைக்கும், வடிவிலருள்வா ரிதியாவாய் வழிபட்டுன்னைப் போற்றுமெனை, கொடியதுயரிற் கைவிட்டால் நினக்கார்தொண்டு செய்வார்கள், கொடியவிடத்தைத் தடுத்தமார் குறைவைக்காக்கும் பெருமானே. உ௦

என்னைப்போல்வார் தமையடைந்தோ ரிடர்தீர்ந்தினிய சுகம் பெறுவார், நின்னையடுத்துன் புகழ்பாடி நெடுநாளுன்னைப் போற்றுமெனை, துன்னுமிடரிற் கைவிட்டாற் றொண்டுநினக்கார் செய்வார்கள், மன்றுமடியா டனக்காக மண்ணுற்றசுமந்த பெருமானே.

அன்பர்மனதைச் சோதிக்க வினைகளுழைய வெடுத்தவர்தம்
முன்புதோன்றி நிலைகண்டு மூத்தியளித்தாய் தொண்டனேன்
வன்புகன்றோ டெடுந்துயரில் வருந்தவிட்டா யறியேனே
இன்பமடியர்க் கிருமையிலு மெளிதாயருளும் பெருமானே. உஉ

வேறு—விருத்தவிசைக்கதி.

கலைமகளை மருமகளாக் காதலித்துக் கொண்டவிந்தக் கனக மங்கை, சிலைமகளைத் தன்கணவன் றங்கையெனப் பெற்றதிருச் செழியமங்கை, தலைபுலவிற் கலையுணர்வார்க் கருத்தனைக்கன் று

ராத தன்மையென்னே, நிலையுணராப் புல்லியர்பா லிவர்செல வுந் தனமுதவு நெறிதானென்னே. ௨௩

அருமைமரு மகளிடத்துங் குறைநினையா மாமியிந்த வகில த்தியினுமில்லை, பெருமை யிவர்சமமாம் வரிசையினாற் பேதமுறும் பெற்றியாலே, இருவரையா ரிவரொருமித் தருள்செய்தா லிக பரங்கள் சித்தியாகும், ஒருமையிவர்க் குண்டாகத் தலைவர்களே சமநோக்க முதவவேண்டும். ௨௪

மகளின்மரு மகளதிக மெனவுலகம் பாராட்டல் வரிசையா லும், மிகவரிய பதங்களிலே யிவர்மருவி யருணிறைந்து விளங் கலாலும், நகைமையுற வுலகமெலா மேன்மேலும் பலவளங்க ட் தழைதலாலும், அகமமர்ந்தெம் முளத்திருந்து தனங்கல்வி யிரண் டுமிவ ளருள்செய்வாளோ. ௨௫

திருமகளைக் கலைமகளும் பலமறையாற் றுதிசெய்து திகழ்த லாலும், மருமகளை யரியபதத் திருத்தியுயர் வளமையுற வைத்த லாலும், இருவருமுன் னன்புடையா ரெனமதித்தோ மியாமினி யிங் கினிமையாக, ஒருமையுற வளர்த்திருந்தி யிருபொருளும் பெ றலாகு முறுதியீதே. ௨௬

கலைமகளைப் போற்றினர்க்கிங் கறம்பொருளின் பம்வீடு கா ட்டுந் திம்பால், அலைமகளை வாழ்த்தினோர்க்கு மிம்மையிலே நாற் பயனு மளித்துக் காக்கும், மலைமகளை யேத்தினோர்க்குப் பவமகன் று முத்திபெறு வழியுண்டாகும், நிலைமையிது நான்மறையா கம ங்களெலா நிச்சயித்து நிகழ்த்துமன்றே. ௨௭

வன்னெஞ்சக் கொடியவர்பால் மலர்மங்கை யிருந்துதனம் வழங்கக் கண்டோம், நன்னெஞ்ச மில்லவர்பாற் கலைமங்கை யி

ருந்ததொரு நாளுங் காணேம், கன்னெஞ்சக் கொடியோர்நல்
லோர்பொருளை வஞ்சனையாற் கவர்ந்துகொள்வார், இன்னெஞ்ச
நல்லோர்தங் கலைப்பொருளை யினிதாக வெவர்க்குமீவார். ௨௮

உலகுயிர்க்கெல் லாந்தாயா மிவர்தகைமை யாரெடுத்திங்
கோதற் பாற்றே, குலமகனல் லாலெவர்கள் குரவர்மற தியை
யெடுத்துக் கூறவல்லார், பலகலனும் புநல்வருக்கல் லாலெவர்க்
குத் தாய்தந்தை பாலிக்கின்றார், புலனுடைய மகன்குரவர்க் கி
யற்றுவகைமா றிதில்வேறென் புகலத்தானே. ௨௯

ஆதலினாற் றிருத்தாயே வஞ்சகரையகன்றுநல்லோ ரகத்திருந்து
மேதகையதனமாகி பணிவுறுபேறுதவ வேண்டுகின்றேன்
நீதியிதுகலைமகள்வாழ் மனைகளெலாமேலாக நெடிதிங்கோங்கும்
பாதகஞ்செய்வஞ்சகரும்பவமகன்றுநன்மையுறப் பாலிப்பாயே.

என்னிருகண் மணியான பொன்மாதுங் கலைமாது மினிது
வாழ்க, மன்னியநற் செல்வர்களுங் கலைஞர்களு மென்மேலு ம
ருவிவாழ்க, பன்னியலஞ் சகமொழிய நல்லோர்க ளுவேட்டோடும்
பலிகிவாழ்க, இன்னியலின் விறலிடையின் பொருளுணர்ந்து
போற்றுமன்ப ரினிதுவாழ்க. ௩௧

பலபாட்டிரட்டு முற்றிற்று.